[illegible]

V.4 No.18 7 May 1931

JL

m211,N28kN

N31·4·78

188916

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ஸு மே மீ 7உ [No. 18.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 341
2. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 46—58) K. இராமரத்நம் ஐயர் B.A. 343
3. கம்ப ராமாயணம் (நகர் நீங்கு படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 346
4. பிஸாரோ நாடகம் - (அங்கம்-4, களம்-2) R. B. Sheridan 349
5. அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 351
6. யாப்பிலக்கணம் (தொடை - மோனை) 355
7. வர்த்தமானம் 359

கலாநிலயம்

எமது நண்பர்களுக்கோர் வேண்டுகோள்.

நமது கலாநிலயம் போன்றவொரு தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தாதார் ஆயிரக் கணக்கில் விரைந்து சேர்வது மிக அருமை என்னுமிது துவக்கும் நாள் தொட்டு நாம் அறிந்ததே. யாம் எழுதும் கட்டுரைகளைப் படித்துப் பயனும் இன்பமும் எய்துதற்குரிய ஆற்றலும் விருப்பமும் உடையவர்களை ஆங்காங்கு ஆய்ந்து ஆய்ந்து ஒருவரொருவராய்ச் சேர்த்தே கலாநிலயத்தை நடத்த இயலும் என்பதையும் மறந்திலம். மனித நோக்கமும் வாழ்க்கையும் நிரந்தர வாய்மைகளை அயர்ந்து மயக்குற ஒரே வழி மண்டுமிந் நாளில் வேறு நோக்கமும் வாழ்க்கையும் உளவென்று அறிவுறுத்தித் தெளிவித்த ஆன்றோர் மொழிகளை ஒரு சிலரேனும் உட்கொள்ளும் வகையில் உதவமுயன்று இயங்குகின்ற எம் கலாநிலயத்தின் வாசகர் பலர் எமக்கு வரைந்து வருகின்ற நிருபங்களிலிருந்தும் அன்னவர் பலரை யாம் நேரே காணப்பெற்று உரையாடிய மொழிகளினின்றும், யாம் தக்கதென மேற்கொண்ட கருமம் பலபடி கைகூடி வருகின்றதெனும் செவ்வியை உணர்ந்து நினைக்குந்தோறும் அந்நினைவு எம் சிந்தையெலாம் நிறைந்தவொரு ஊக்கத்தைச் சிறக்கச் செய்கின்றது. எம்முடைய நோக்கத்தையும் முயற்சியையும் அவைகளால் விளைந்து வருகின்ற பயனையும் பெருந்தன்மையுடன் பாராட்டிக் கொண்டாடும் எமது நண்பர்களனைவர்க்கும் வந்தனம்.

இத்தகையதோர் பத்திரிகையை இடையூறின்றி நிகழ்த்துதற்கு நாள்தோறும் எத்துணை மணி நேரம் யாம் அளிக்கவேண்டுமென்பதும் எத்துணை மெய்வருத்தம் எய்தவேண்டுமென்பதும் யாம் உரைக்க வேண்டா. வருவாய்க்கு ஓர் வழியாக இதனை மேற்கொண்டிலோமாதலின் மெய்வருத்தமென உரைக்கத் தகுவனவெல்லாம் உண்மையில் எமக்கு உற்சாகமாகவே மாறிவிடுகின்றது. காலத்தைச் செலவுசெய்து இதனிற் சிறந்ததோர் கருமம் யாம் கண்டிலமாதலின் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடமும் எம்மை உயரிய வாழ்க்கையோடு மிக நெருங்க உறவுசெய்து வைக்கின்றது. ஆதலின், காலமும் வேலையும் அதிகங் கொள்கின்றதிக் கலாநிலயம் என்று நாம் ஒருபோதும் நையமாட்டோம்.

மற்று எம்மை இடர்செய்வது இதற்குரிய பொருட்செலவே. ஆயுள்சந்தா என்றேனும் நன்கொடையென்றேனும் யாம் எவ்விதப் பொருளுதவியும் பெறுதற் கிசைந்திலேம். எம்மிடம் கொண்ட பத்திரிகைக்கு மறுவிலையாகத் தரும் சந்தாத்தொகை தவிர வேறெதனையும் யாம் எமது அண்மிய நண்பர்களிடத்தும் எதிர்பார்ப்பதுமில்லை. கலாநிலயத்

தின், அச்சு காகிதம் அமைப்பு முதலிய நலங்களுக்கு ஏற்றபடி செலவும் ஆக வேண்டுமென்பதை அறிவது அருமையன்று. முதலிலிருந்து ... வரையில் எக்காலத்திலும், ஆகும் செலவ... சந்தாவின் வருவாய் ஈடு செய்ததில்லை. எம்முடைய கைப்பொருளைக் கொண்டே மேற்பட ஆகின்ற செலவுகளுக்கு உடன்பட்டுவந்தோம். மூன்று வருடங்களுக்குமேல் இப்படிச் செய்துவந்த நாம், இனி அவ்வண்ணம் கைப்பொருள் செலவுசெய்ய இயலாத நிலையில் இருக்கின்றோம். மேலும், சென்ற ஆண்டுகளில், எம்முடைய நிலையை நன்குணர்ந்த நண்பர்கள் சிலர் செட்டிநாட்டிலும் பர்மா மலேயா முதலிய இடங்களிலும், உண்மையாய உழைப்பு எம்பொருட்டு இயற்றித் தத்தம் செல்வாக்கினால் புதியபல சந்தா நண்பர்களை எமக்குச் சேர்த்துத் தந்தவண்ணமாயிருந்தனர். அதனால் எமக்கு அவ்வப்போது எய்தும் பொருளிடர் ஒருவாறு தணிகின்ற உதவி வாய்த்தது. இந்நாள் மலேயா பர்மா முதலிய இடங்களின் நிலை இருக்குமாறு யாவரும் அறிந்ததே. ஆதலின் அந்த நண்பர்கள் முன்போல் உதவிசெய்ய இயலாதவராயிருக்கின்றனர். இதுவரையில் கைப்பொருள் அதிகம் கலாநிலயத்தின்பொருட்டுச் செலவுசெய்து சோர்ந்திருக்கின்ற நாம், கழிந்துபோன செலவை நினைத்துச் சிறிதும் கவல்கின்றேம் அலேம். ஆயினும், இனியும் செய்வதற்கு இயலவில்லையே என்னுங்குறை யொன்று பெரிதிடைப்புகுந்து எம்மை உழக்குகின்றது. இந்நிலையில், கலாநிலய வாசகர்பால் இறுதியாக விடைபெற்றுக்கொண்டுவிட நேருமோ என்னுமோர் அச்சம் எழுந்தெழுந்து எமதுள்ளத்தை உறுத்துவதும்இயற்கையே. மேலே இப்பத்திரிகை நடப்பதெப்படி என்ற நினைவல்லாமல்பட்டிருக்கும் நஷ்டத்தையாம் பொருட்படுத்தவில்லை. இம்மூன்று வருடகாலமாக எம்மோடிருந்து உறவாடிப் பயின்றுவந்த கலாநிலயம் பிரிய வேண்டி நேர்ந்ததாயின் எம்மைப்போல் துயர்கூரும் நண்பர்கள் சிலர் உளர் என்னும் நிச்சயத்தால் இது வரைகின்றோம். அன்னவர் ஒரு சிலர் இதனைத் தம் கருமமாகக் கருதிக் கைதர விரைவாரேல் இவ்வரிய நிலையைக் கலாநிலயம் கடந்து நிலவலாம் என்னும் உறுதியைக் கடவுள் எமக்கு அளிக்கின்றனர்.

அன்ன தன்மையராய உண்மை நண்பர்களை யாம் இன்று, கடவுளின் அருளை முன்னிட்டு எம்முடைய நவிக்கு அழைக்கின்றோம். கலாநிலயம் நிலவுதல் லகத்தின் நலத்திற்காம் என்ற நினைவுடையவர்கள் அனைவரும், உடுக்கை இழந்தவர் கைபோன்று கலாநிலயத்தின் உதவிக்கு மிகமிக விரைந்து வருதல் வேண்டுமென்பது இன்றியமையாததாகின்றது. பரிவுகூர்ந்து எமது நண்பர்களனைவரும் கலாநிலயத்திற்கு உதவிசெய்யவேண்டு மென்பதைத் தங்கள் முக்கிய கருமங்களில் ஒன்றாக மதித்துத் தாம்தாம் வசிக்கும் ஊர்களில் உள்ளவர்களை எமக்கு மிகமிக விரைவில் சந்தாதார்களாகச் சேர்த்துச் சந்தாத் தொகையுடன் அன்னவர் விலாசங்களையும் அனுப்பும்படி வேண்டுகின்றோம். வேற்றூரிலுள்ளவர்க்கும் கடிதம் வரைந்து இவ்வுதவி செய்ய இயலுமெனினும் நன்றே. மற்று எமது பிரதிநிதி எவரேனும் வருவாராயின் தம்மூரில் சந்தாநண்பர்கள் சேர்க்கின்ற காரியம் எளியதாயிருக்குமெனக் கருதும் நண்பர்கள் அதனைத் தயைசெய்து எமக்குத் தெரிவிக்கவும். இதற்கிடையில், கலாநிலயத்தின்பால் பரிவுடையராய் அதனிற்கு உதவி செய்ய வேண்டுமென்று மனங்கொண்டிருக்கும் நண்பர்கள் அவர் கருத்தை எமக்குத் தெரிவித்து உறுதி ஊட்டுவாராயின் மிகவும் நலமாயிருக்கும். கலாநிலயம் உற்றுள இவ்விடுக்கணைக் களைந்து அதனை வளர்ப்பதற்கு எமது நண்பர் எவ்வளவு விரைந்து கைதருகின்றனர் என்பதைக் காண நாம் காத்துக் கொண்டிருக்கிறோம். இவ்வண்ணம்இவ்வருடம்இடையூறின்றிப் பலர் புரிந்த உதவியால் கலாநிலயம் நடந்தேறிவிடுமாயின் அடுத்த ஆண்டில் நம் தேயத்தின் நிலை ஓரளவு அமைதியெய்த எம்முடைய கருமம் சுலபமாகும் என்னுமோர் நம்பிக்கையுளது. கலாநிலயத்தை எளிதில் யாம் கைவிடமாட்டோம். எவ்வளவு வகைகளில் முயல்வதற்கியல்கின்றதோ அவ்வளவு வகைகளில் யாமும் இங்கு முயன்றுவருகின்றோம். இந்த முயற்சி வீணாகாவண்ணம் எமது நண்பர்கள் உடன்சேர்ந்து உதவுவது அவர் கடன் என உரைக்கும் உரிமை எமக்கு இல்லையெனினும், அவருடைய பெருந்தன்மைக்குக் கலாநிலயம் கடப்பாடுடையதாயிருக்கும் என இயம்பல் மிகையாகாது. இதனைக் கண்ணுற்றவுடன் எமது நண்பர்களாயிருப்பார் அனைவரும் தயைபுரிந்து விரைவில் எமக்குக் கடிதங்கள் வரைந்து எமது ஊக்கம் தளராமல் நிலைநிற்பதற்குரியன செய்யுமாறு வேண்டுகின்றோம்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[329-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

163. அஞ்சுடர் முருக்கி னங்கேழ்
அணிமல ரணிந்து கொம்பர்த்
துஞ்சிடை பெறாது தும்பி
துவன்றிமேற் றுகைக்குந் தோற்றம்
செஞ்சுட ரிலங்குஞ் செந்தீக்
கருஞ்சுடர்க் கந்துள் சிந்தி
மஞ்சுடை மயங்கு கானம்
மண்டிய வகையிற் றன்றே. 46.

அம் சுடர் முருக்கின் கொம்பர் - அழகு விளங்கும் முள்முருக்க மரத்தின் கிளைகளில், அம்கேழ் அணி மலர் அணிந்து - அழகிய (செந்) நிறத்தைக்கொண்ட மலர்கள் வரிசைவரிசையாக நெருங்கிப் பூத்திருந்தமையால், தும்பி - வண்டுகள், துஞ்சு இடை பெறாது - தங்குமிடம் பெறாது, துவன்றி - நிறைந்து, மேல் துகைக்கும் தோற்றம் - அவற்றின் மேல் விழுந்து நசுக்குந் தோற்றம், மஞ்சு உடை - மேகங்கள் தங்கப்பெற்று, மயங்குகானம் - ஒளி உள்ளே புகாவண்ணம் மரங்கள் அடர்ந்து உட்செல்வார் மயங்கத் தக்க கானம், செஞ்சுடர் இலங்கு செந்தீ - செம்மையான தழலோடு கூடிய செவந்த நெருப்பின்மீது, கரும் சுடர் கந்துள் சிந்தி - கருநிறத்தையுடைய கரியை மிகுதியாக மேலேபோட, மண்டிய வகையிற்று - தீப் பற்றி எரிந்தாற் போன்று இருந்தது. அன்றே, ஈற்றசை.

'அணிந்து,' 'சிந்தி' என்பவற்றை 'அணிய' 'சிந்த' என மாற்றிக்கொள்க. கொம்பர், செந்தீ - கொம்பர்க்கண், தீக்கண்; (ஏழாம் வேற்றுமைத் தொகை). துஞ்சுதல் - தங்குதல். மஞ்சு, அழகென்றுமாம்.

---

164. அந்தழை யசோகம் பூத்த
அழகுகண் டவாவி னோக்கி
வெந்தழற் பிறங்க லென்று
வெருவிய மறுவி றும்பி
கொந்தவிழ்ந் துமிழப் பட்ட
குளிர்மதுத் திவலை தூவச்
செந்தழற் பிறங்க லன்மை
தெளிந்துசென் றடைந்த வன்றே. 47.

அம் தழை - அழகுதழைத்த (மிக்க), அசோகம் - அசோகமரங்கள், பூத்த அழகு கண்டு - மலர்ந்து விளங்கும் அழகைக் கண்டு, அவாவின் நோக்கி - தேனையுண்ணும் ஆசையோடு அணுகி நோக்கி, வெம் தழல் பிறங்கல் என்று - வெவ்விதாகிய நெருப்புமலையென்று ஐயுற்று, வெருவிய மறு இல் தும்பி - அஞ்சியகன்ற கபடமற்ற வண்டு, கொந்து அவிழ்ந்து - மலர்க்கொத்துக்கள் முறுக்குடைந்து, உமிழப்பட்ட - சொரியப்பட்ட, குளிர் மதுத் திவலை - குளிர்ந்த தேன் துளிகளை, தூவ - (காற்று) பரக்க வீசுதலால், செம் தழல் பிறங்கல் அன்மை தெளிந்து - அது செவந்த நெருப்புமலை அன்றென்பதைத் தேறவுணர்ந்து, சென்று அடைந்த - திரும்பிச் சென்று பொருந்தின.

திவலைதூவ - 'திவலைகள் சிந்த,' என்று எழுவாய்த் தொடருமாம்

---

165. மாஞ்சினை கறித்த துண்டந்
துவர்த்தலின் மருங்கு நீண்ட
பூஞ்சினை முருக்கஞ் சோலைப்
பூக்கள்வா யார மாந்தித்
தீஞ்சுவை மிழற்று கின்ற
சிறுகுயில் செல்வ ரேனும்
தாஞ்சுவை திரிந்த பின்றைச்
சார்பவ ரில்லை யன்றே. 48.

சிறுகுயில் - சிறிய குயில்கள், மாஞ்சினை கறித்த துண்டம் - மாந்தளிர்களைக் கோதியுண்ட தமதுவாய், துவர்த்தலின் - துவர்ப்புண்டமையால் அவற்றை விட்டுநீங்கி, மருங்கு - பக்கத்தே, நீண்ட பூஞ்சினை முருக்கம் சோலை - நீண்ட பூச்செறிந்த கிளைகளையுடைய முள்முருக்க மரச்சோலையிலுள்ள, பூக்கள் வாய் ஆர மாந்தி - பூவின் மதுவை வாய்நிறையக் குடித்து, தீம்சுவை மிழற்றுகின்ற - இனிய இசைகளைப் பாடாநின்றன. தாம் செல்வர் எனும் - தாங்கள் செல்வம் நிறைந்தவராய் இருந்தாலும், சுவை திரிந்த பின்றை - குணம் மாறுபட்டுப் போனபின், சார்பவர் இல்லை - அவர்களை ஒருவரும் அடையார். அன்றே, ஈற்றசை.

சினை - உறுப்பு, இங்கே தளிர். துண்டம் - பறவையின் மூக்கு; the beak of a bird. 'மாந்தி' என்பதற்கு 'உண்ணல்' என்ற பொதுப்பொருளும், குடித்தல் என்ற சிறப்புப்பொருளும் உண்மையின், 'பூக்கள் மாந்தி' என்பதற்குப் பூக்களையுண்டு என்றும் உரைக்கலாம். சுவை - (ஆகுபெயர்) இன்சுவையோடு கூடிய இசை.

இச்செய்யுளின் முன்னிரண்டடிகளை நினைவிற் கொண்டே திருமங்கை வேந்தன்,

மாம்பொழில் தளிர்கோதிய
மடக்குயில் வாயது துவர்ப்பெய்த
தீம்பலங்கனி தேனது நுகர்திரு
வெள்ளறை நின்றானே.

என்று பெரியதிருமொழில் அருளியிருத்தல் காண்க.

---

166. கோவைவண் டூதுகின்ற
குரவெனுங் குரைகொண் மாதர்
பாவைகொண் டாடு கின்ற
பருவத்தே பயின்ற காமன்
ஆவிகொண் டிவளைக் கைவிட்
டகலுமோ வென்று தத்தம்
பூவையுங் கிளியுங் கொண்டு
புலம்பின பொழில்க ளெல்லாம். 49.

கோவை வண்டு-வண்டின் வரிசைகள், ஊதுகின்ற-தாதை உண்ணுகின்ற, குரவு என்னும் குரைகொள் மாதர் - குராமரமாகிய பெண், பாவை கொண்டு ஆடுகின்ற - மகளைப்பெற்று அதனோடு கொஞ்சி விளை

யாடுகின்ற, பருவத்தே - பருவத்திலே, பயின்ற- தலை யளி புரிந்து மருவிய, காமன் - மன்மதனை யொத்த காதலன், ஆவிகொண்டு இவளை கைவிட்டு - இவளது உயிரைத்தான் கைக்கொண்டு இவளை வெற்றுடம் பினளாய்க் கைவிட்டு, அகலுமோ - பிரிந்திடுவனோ, என்று—, தத்தம் பூவையும் கிளியும் கொண்டு - நாகணவாய்ப்புள்ளுங் கிளிகளுமாகிய தங்கள் வாயால், பொழில்கள் புலம்பின - சோலைகள் அழுது இரங்கின.

இப்பாட்டின் பின்னடிகள் மூன்றும், குராமரத்தை ஒரு பெண்ணாகக் கூறியதைப் பின்பற்றிவந்த சிலேடையணி. பாவை - குராமலர்; இதனைப் பாவையென்னும் மரபைப் பழைய நூல்களிற் பரக்கக் காணலாம். பாவை கொண்டு ஆடுகின்ற - மலர்களைத் தாங்கி, அசைந்தாடுகின்ற, பருவம் - இளவேனிற் காலம், காமன் - வண்டு, ஆவி - வாசனை, என்பன மற்றைய பொருள். கொண்டு - மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. குரைகொள் - அசை.

---

167. வயந்தமாங் குணர்த்தக் கேட்டே
மன்னவன் மக்க ளோடும்
உயர்ந்ததன் னுரிமை யோடும்
உரிமைகாப் பவர்க ளோடும்
கயந்தலை களிறுந் தேரும்
வையமுங் கவின வேறி
நயந்தன னகரி னீங்கி
மனோவன நண்ணி னானே. 50.

வயந்தம்-வயந்ததிலகை, ஆங்கு உணர்த்த கேட்டே-அவ்வாறு சொல்லக்கேட்டு, மன்னவன்—, மக்களோடும் - தனது மகனோடும் மகளோடும், உயர்ந்ததன் உரிமையோடும் - சிறந்த தனது தேவிமாரோடும், உரிமை காப்பவர்களோடும் - அம்மனைவிமார்க்கு மெய் காப்பாளராகிய பரிசனங்களோடும், கயந்தலை களிறு - மென்மையான தலையையுடைய யானையும் தேரும்—, வையமும் - சிவிகையும், கவின - அழகுற, ஏறி—, நகரின் நீங்கி -நகரத்தைவிட்டு வெளிப்போந்து, மனோவனம் - மனோவனமென்னும் சிருங்காரவனத்தை, நயந்தனன் - விரும்பி, நண்ணினான் - சேர்ந்தான்.

கயந்தலை களிறு -சந்தவின்பம் நோக்கி ஒற்றிரட்டவில்லை. கயந்தலை-யானைக்கன்று என 'கயந்தலைகளிறு', என்பதை உம்மைத் தொகையாகவும் கொள்ளலாம். வையம் - கொல்லாப்பண்டி, அல்லது கூடாரப்பண்டி, என்பர் அடியார்க்குநல்லார்.

வேறு

168. கோமான்சென் றணைதலுமே
கொங்கணிந்த மலர்தூவித்
தேமாவின் றெதிர்கொள்ளச்
சிறுகுயில்போற் றிசைத்தனவே
வாமான்றேர் மன்னர்க்கு
மங்கலஞ்சொன் மகளிரைப்போல்
தூமாண்ட விளங்கொடிதந்
தளிர்க்கையாற் றொழுதனவே. 51

கோமான் - அரசன், சென்று அணைதலும் - சென்று அடைந்தவுடன், தேன்மா - இனிய மாமரங்கள், கொங்கு அணிந்த மலர் தூவி-தேனைக்கொண்ட மலர்களை அடிகளிற் சிந்தி, நின்று எதிர்கொள்ள-எதிர்கொண்டு அழைப்பபோல நிற்க, சிறுகுயில் போற்று இசைப்ப - சிறிய குயில்கள் துதிபாட, தூமாண்ட இளங்கொடி - மழைபாற் செழித்த இளமையான கொடிகள், வாம் மான் தேர் மன்னர்க்கு - தாவிச் செல்லும் குதிரை கட்டிய தேரையுடைய அரசர்களுக்கு, மங்கலம் சொல் மகளிரைப்போல் - மங்கல வாழ்த்துக் கூறும் பெண்களைப்போல, தம் தளிர் கையால் - தமது தளிராகிய கையால், தொழுதனவே - வாழ்த்தி வணங்கின.

கொங்கு - வாசனையுமாம். தேன்மா - தேமா, தேன் - இனிமை. போற்று - போற்றுதல் என்னும் முதனிலைத் தொழிற்பெயர், இங்கே ஆகுபெயராய், துதிமொழிகளைக் குறித்து வந்தது. போற்றிசைத்தல் என்று ஒரு சொல்லாகக் கொள்ளலுமாம். வாம் - வாவும்; 'செய்யுமென்னும் பெயரெஞ்சு கிளவிக்கு, மெய்யொடுங்கெடுமே யீற்றுமிசை யுகரம்' (தொல்கா—சொல்லதி—238) என்ற விதியாற் கொள்க. மான் - மா, குதிரை. தூ - தூவல், மழை; (முதனிலைத் தொழிற்பெயர்.)

---

169. கடிவாச மலர்விண்ட
கமழ்தாது கழலவற்கு
வடிவாசப் பொடியாக
வனவல்லி சொரிந்தனவே
புடைவாசங் கொளமாலம்
பூங்கவரி யெடுத்தெறியக்
குடைமாக மெனவேந்திக்
கோங்கம்போ தவிழ்ந்தனவே. 52.

கடி வாசம் மலர்-மிக்கவாசனையை யுடைய மலர்களிடத்தில், விண்டகமழ் தாது-மலர்ந்தகாலத்தில் வெளிப்பட்ட மகரந்தத்தை, கழலவன்கு - அரசனுக்கு, வடிவாசம் பொடியாக - தெள்ளிவடித்த வாசனைப் பொடியாக (சுண்ணமாக), வனவல்லி - அழகிய கொடிகள், சொரிந்தன - வீசின. மாலம் - குங்குமமரங்கள், புடை வாசம் கொள - பக்கமெல்லாம் மணம் கமழுமாறு, பூங்கவரி - பூங்கொத்தாகிய சாமரங்களை, எடுத்து எறிய - எடுத்து வீச, கோங்கு - கோங்க மரங்கள், மாகம் குடை என - ஆகாயத்தைத்தொடும் குடையாக, ஏந்தி - தூக்கி, அம் போது-அழகியமலர்களை, அவிழ்த்தன - விரித்தன.

கடிவாசம் - புதியவாசனை என்றும், வாசனைக்கு இருப்பிடம் (வாசம்-வசிக்குமிடம்) என்றுங் கொள்ளலாம். மாகம் - ஆகாயம்.

---

170. கொடியாடு நெடுநகரக்
கோமான்றன் குணம்பரவி
அடிபாடு மவர்களென
அணிவண்டு முரன்றனவே ;
வடிவாய வேலவற்கு
மலர்ச்சின்னஞ் சொரிவனபோல்
கொடுவாய கிளிகோதிக்
குளிர்நறும்போ துகுத்தனவே. 53.

கொடிஆடு-கொடிகள்மாடங்களின் மீதே ஆடுகின்ற, நெடு நகரக் கோமான்தன் - பெரிய நகரத்துக்கு அரசன் ஒருவனுடைய, குணம் பரவி-குணங்களைப் புகழ்ந்து, அடிபாடும் அவர்கள் என - அடிவணங்கித் துதிபாடும் சூதர் மாகதர்போல, அணிவண்டு-அழகிய வண்டுகள், முரன்றன - ரீங்காரம் செய்தன. வடிவாய வேல் அவன்கு - கூர்மையான வேலையேந்திய அவ்வரசன் வரவைக் குறித்து, சின்னம் மலர்கள் - விடுதிப் பூக்களை, சொரிவனபோல் - சொரிந்தாற்போல், கொடுவாய்க் கிளி - வளைந்த வாயையுடைய கிளிகள், கோதி - தமது அலகாற் கறித்து, குளிர்நறும்போது, குளிர்ந்த நல்ல வாசனையோடு கூடிய மலர்களை, உகுத்தன - சிந்தின.

கொடுவாய்: கொடுமை - வளைவு.

---

171. குரவகத்துக் குடைந்தாடிக்
குளிர்நறவங் கொப்பளித்தார்த்
தரவவண்டின் னிசைபாட
அருவிநீ ரளைந்துராய்
விரைமலர்ந்த துணர்வீசி
விரைஞாற வருதென்றல்
புரவலன்றன் றிருமுடிமேற்
போதலர வசைத்ததே. 54

குரவு அகத்து குடைந்து ஆடி - குராமலர்களினுள்ளே புகுந்து முழுகி, குளிர்நறவம் கொப்பளித்து-குளிர்ந்த தேனை வாயிலிருந்து வழியும்படி நிரம்பப் பருகி, ஆர்த்து -மொய்த்து, அரவவண்டு - ஒலியைச் செய்யும் வண்டு, இன்னிசை பாட - இனிய பாட்டுக்களைப் பாட, அருவிநீர் அளைந்து உராய் - அருவி நீரிலே படிந்து பெயர்ந்து, விரைமலர்ந்த துணர்வீசி-வாசனை வெளிப்பட்ட பூக்களைச் சிதறி, விரைஞாற-நறுமணம் (நாலாபக்கமும்) கமழும்படி, வருதென்றல் - வந்த தென்றற்காற்று, புரவலன்தன் திருமுடிமேல்போது-அரசனுடைய அழகிய கிரீடத்தின்மேல் அணிந்த மாலையிற் கட்டிய பேரரும்புகள், அலர-மலரும்படி, அசைத்தது-அதை அசைந்தாடச்செய்தது.

அரவம் -ஒலி. உராய் - பரந்து, என்றுமாம். விரை-இரண்டிடத்தும், வாசனை. ஞாற - நாற; நகரத்துக்கு ஞகரம் போலியாய் வந்தது. போது-மலரும் பக்குவத்தரும்பு.

---

172. இன்னவா றிளவேனி
லெதிர்கொள்ள வெழில்யானை
மன்னவாந் தனிச்செங்கோல்
மறவேல்வை யகவேந்தன்
தன்னவா மடவாரைத்
தானுவந்து பொழில்காட்டி
மின்னவா மிடைநோவ
விளையாட வருளினான். 55

இன்னவாறு இளவேனில் எதிர்கொள்ள - இவ்விதமாக இளவேனிற்காலம் தன்னை எதிர்கொண்டு வரவேற்க, எழில்யானைமன் - அழகிய யானையையுடைய மன்னர்கள், அவாம் - விரும்பத்தக்க, தனிச்செங்கோல் - ஒப்பற்ற செங்கோல் முறைமையினையும், மற வேல் - வலிமைபொருந்திய வேலையும் உடைய, வையக வேந்தன் - அந்த (வித்தியாதர) உலகத்துக்கரசன், தான் உவந்து - தான் மனமகிழ்ந்து, தன் அவாம் மடவாரை - தன்னை விரும்பும் தனது தேவிமார்க்கு, பொழில்காட்டி - அந்தவனத்தின் வளப்பங்களையெல்லாம் காட்டி, மின் அவாம் இடை நோவ - மின்னலையொத்த அவர்களுடைய இடை நோவுமாறு, விளையாட - அவர்களுடன் விளையாட்டயர, அருளினான் - விருப்பங்கொண்டான்.

---

173. எரியணிந்த விளம்பிண்டி
யிணரார்ந்த விடமெல்லாம்
பொரியணிந்து புன்குதிர்ந்து
பூநாறுந் துறையெல்லாம்
வரியணிந்து வண்டூத
வளர்கின்ற விளவேனில்
புரியணிந்த குழலீர்நுஞ்
செல்வம்போற் பொலிந்ததே. 56

புரி அணிந்த குழலீர் - பின்னலழகைக் கொண்ட கூந்தலையுடையவர்களே, எரி அணிந்த - நெருப்பை யொத்த, இளம் பிண்டி இணர் ஆர்ந்த - இளமை வாய்ந்த அசோகத்தின் பூங்கொத்துக்கள் நிறைந்த, இடமெல்லாம் - இடமெங்கும், புன்கு உதிர்ந்து - புன்கமரத்தினின்று உதிர்ந்து, பூ பொரியணிந்து நாறும் - பூக்கள் நெல்லின் பொரியைப்போலத் தோன்றும், துறையெல்லாம் - நீர்த்துறை யெங்கும், வரி அணிந்த வண்டு ஊத - வரிப்பாட்டுக்களைப் பாடிக்கொண்டு வண்டு தாதையுண்ணும்படி, வளர்கின்ற இளவேனில் - வளர்ச்சியுற்ற இளவேனிற் காலம், நும்செல்வம் போல் - உமது உறுப்பு நலனாகிய வனப்பைப்போல் (பலதிறத்தாலொத்து), பொலிந்தது - விளங்குகின்றது. (அதை நீங்கள் காண்பீராக.)

எவ்வாறு இளவேனில் இவரது செல்வம்போற் பொலிந்தது என்பதை அடுத்த விரண்டுகவிகள் விளக்கும்.

---

174. காரணிந்த குழலீர்நுங்
கைத்தலங்க டமைநோக்கிச்
சீரணிந்த செழும்பிண்டி
தளிரீன்று திகழ்ந்தனவே ;
வாரணிந்த முலையீர்நும்
மருங்குறனின் வகைநோக்கி
ஏரணிந்த குருக்கத்தி
யிளங்கொடித்தா யீன்றனவே. 57

கார் அணிந்த குழலீர்-கருமேகத்தை யொத்த கூந்தலை யுடையவர்களே, நும் கைத்தலங்கள் தமை நோக்கி - உமது கைத்தலங்களைப்பார்த்து, சீர் அணிந்த செழும்பிண்டி - அழகுபொருந்திய செழிப்புற்று வளர்ந்த அசோக மரங்கள், தளிர் ஈன்று -(அக் கைத்தலங்களுக்கு நிகரான) தளிர்களைத் தோற்றுவித்து, திகழ்ந்தன-விளங்காநின்றன; வார் அணிந்த முலையீர்-கச்சையணிந்த முலையையுடையவர்களே, நும் மருங்குல் தனின் வகைநோக்கி - உமது இடைகளின் அழகைப்பார்த்து, ஏர் அணிந்த குருக்கத்தி - அழகு பொருந்திய மாதவி, தாய் - தாவிப்படர்ந்து, இளங்கொடி - (அவ்விடையை யொத்த) இளங்கொடிகளை, ஈன்றன - விடுக்காநின்றன.

பிண்டி - அசோகமரம். வகை - வகுப்பு, அழகு. குருக்கத்தி - ஒரு பூங்கொடி. தாய் - தாவி (வினையெச்சம்.) குருக்கத்தித் தாய் - மாதவியின் தாய்க்கொடி இளங்கொடியை ஈன்றது என்றலுமாம்.

175. மாந்தளிரிங் கிவைநுமது
நிறங்கொண்டு வளர்ந்தனவே.
ஏந்திளந்தீங் குயிலிவைநுஞ்
சொற்கற்பா னிசைந்தனவே;
தேந்தளங்கு குழலீர்நுஞ்
செவ்வாயி னெழிநோக்கித்
தாந்தளிர்மென் முருக்கினிய
தாதோடு தயங்கினவே. 58.

மா தளிர் இங்கு இவை - இங்குள்ள மாந்தளிர் இவை, நுமது நிறம்கொண்டு - உமது மேனியின் காந்தியைக்கொண்டு, வளர்ந்தன - வளராநின்றன. ஏந்து இளம் குயில் இவை - மிக்க இளமையோடு கூடிய குயில்இவை, நும்சொல் கற்பான் - உமது இனிய சொல்லைக் கற்றுக்கொள்ளும் பொருட்டு, இசைந்தன - உமதருகேவந்து சாராநின்றன. தேன் தளங்கு குழலீர்-வண்டுகள் (படிந்து) ஒலிக்கும் கூந்தலையுடையவர்களே, நும் செவ்வாயின்எழில் நோக்கி- உமது செவந்தவாயின் அழகைப்பார்த்து, தளிர் மென் முருக்குதாம் - தளிர்த்த மென்மைபொருந்திய முள்முருக்கமரங்கள், இனிய தாதோடு- இனிய பூவின் இதழ்களோடு, தயங்கின - விளங்காநின்றன.

நிறம் - மேனியின் நிறம், தேககாந்தி. ஏந்து இளமை - (ஏந்தெழில் என்றாற்போல) உயர்ந்த, சிறந்த இளமை. தளங்கு - தழங்கு; ழகரத்துக்கு ளகரம் போலியாய் வந்தது. தாது - பூவிதழ்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[334-வது பக்கத் தொடர்ச்சி]

மன்னவ னுணையை மறுக்காக் கற்பினள்.

மூத்தோனிருக்கப் பரதன் முழுநிலம் ஆளலாவதில் முறைமையின்றெனும் ஒன்றலால் தனக்கேனும் தன்தனயற்கேனும் யாதுங் குறைகாணாக் கோசலைக்கு இராகவன் உரைக்கவேண்டியது இன்னுமொன்றுளது. கானிடைக் கழிந்துதான்பிரிதல்வேண்டுமெனுஞ் செய்தியை இதுகாறுங் கூறினானல்லன். துண்ணெனக் கேட்டுத் தாங்கருந்துயராற் றன் னின்னுயிர் துறக்கா வண்ணம் அவள் மனதைப் படிப்படியாகப் பண்படுத்திய பிறகு பதம்பார்த்து அக்கொடுஞ் சொல்லைஇவன் வழங்க நினைத்தது சாலத் தகவுடையதே. துங்கமா முடி பரதனே சூடுகின்றான் என்னக்கேட்டும் அவ்வியம் அவித்தசிந்தையளாய் அத்தூயவள் ஆசிகள் கூறக் கண்ட இராமன், நீமுடி ஏன் புனைந்திலை என்றிவள் தன்னை முன்வினவியதும் அன்னைக்கடுக்கா அதிகச்சொல் என நொந்திருந்த நினைவும் மாறி அவள்பால் அன்பும் உவகையும் தழைக்கின்ற உள்ளத்தனாய்,

நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டோர் பணியென் றியம்பினான்

[என்னை நன்மார்க்கத்தில் செலுத்தும்பொருட்டு அரசன் இட்ட இன்னொரு கட்டளையும் இருக்கின்றது]

என்றியம்பிய நயமொழி இதனுள் பேரிடியொன்று புதைந்திருந்து குமுறுகின்ற கொள்கையை அறியாள் கோசலை. நாயகன் பணியென்ற சொல்லும் இராமனது முகப்பொலிவும் சங்கை யெதற்குஞ் சிறிதேனுமிடந் தருமோ? ஆதலின் யாதுங் கவலலின்றி, அவள்

ஈண்டு ரைத்த பணியென்னை யென்றலு
மாண்டொ ரேழிரெ டேழகன் கானிடை
மாண்ட மாதவ ரோடுடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டுமென் றுனென்றான்.

[உன்னிடத்து உரைத்த கட்டளை என்ன, என்று கேட்கவும், அகன்ற காட்டினிடத்தில், பதினன்கு வருடகாலம் மாட்சிமையுடைய சிறந்த தவசிகளுடன் சேர்ந்து தங்கிப் பின் நான் திரும்பி வரவேண்டும் என்று அரசன் கட்டளையிட்டான், என்று இராமன் தெரிவித்தான்]

தன்னைத் தயரதன் காட்டிற் கனுப்புமிது கருதற்கரிய பெரியதொரு விபரிதமாகலாவதை மறைத்து வைத்து எத்துணை இயற்கையாக்கலாமோ அத்துணை இயற்கையாக்க முயன்றான் இராமன். இக்கருமத்தில் கைகேசியின் கையும் கலந்திருந்ததென்பதை இம்மியளவுங் கோசலைக்குக் காட்டவில்லை இப்பெருந்தகை. கோசலப்பேரரசின் நிறைபரத்தைத் தான் மேற்கொள்ளுமுன் அடவிநண்ணி மாதவத்தவர் உறவினாற் சீலமுந் தருமமும் தேர்ந்துவரவேண்டுமெனல் நாயகன் கருத்தாயின் அதனை மறப்பவள் கோசலை யல்லள். அதுகாறும் அரசிற்குரியவன் பரதனென்பதும் உரையாமற் கொள்ளப்படும். இன்னவாறு தனதன்னைக்கோர் துன்பமும் நண்ணமல் தன்னிலை தெரிவிக்க முயன்ற அறிவாளி இராகவனுந் தன் பரிவினிடையே ஒன்று மறந்தனன். முன்பின் நிகழ்ச்சி யாதுமின்றித் தயரதன் ஒருநாள்தன் மூத்தபுதல்வனை யழைத்துக் "கானகஞ் சேர்ந்துநீ மாதவத்தவர்பால் ஐயமின்றி நன்னெறி ஆண்டோர் பதினன்கு பயின்று வருக. யானோ இவ்வரசின் பெரும் பாரத்தினாற் சால அலசியுளன். நீ மீளுங்காறும் நின் தம்பி பரதன் இந்நானிலங்காக்கலாவான்" என விதித்தனன் என்ன இராமன் கோசலைக்குக் கூறநேர்ந்ததாயின் அம்மாற்றம் அவள்பால் சென்றிருக்கும். மற்று இன்றைய நிலையோ அவ்வாறன்று. இராமனுக்கு முடிசூட்டித் தானே வனமேகநின்ற பெற்றியை விளம்பாஞ் செய்துள்ளான் தயரதன். முடிபுனை திருவினைக்குரிய கருமங்கள்யாவும் முற்றுப்பெற்றிருந்தன. இடையூறிலதெனின் இக்கணம் இராமன் மௌலியோங்கிய சிரத்தனாய்க் கோசலையை வணங்கிஇருத்தல் வேண்டுமே. பின்மதிப் பேதையல்லன் தயரதன். இராமனை நன்னெறி உய்க்கவே உன்னியிருந்தானெனின் அதனை முன்னரே கருதியிருப்பானன்றி இறுதிக்கணத்திலோ கதுமென நினைவுகொண்டு, துவக்கிய இப் பெருங்காரியத்தை மாற்றியிருப்பான்? இத்துணைத் தெரிந்துகொள்ளும் மதியுடையவள் ஆற்றல் சால் கோசலை. ஆதலின்,

ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுன
மேங்கி னளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கி னள்விம்மி னள்விழுந் தாளரோ

[இராமன் உரைத்த வாசகமாகிய நெருப்பு, குழைகள் அசைகின்ற தன் காதுகளிற் படாததற்குமுன், ஏங்கினள்

அழுதாள், சோர்ந்தாள், மனம் திகைத்தாள், பெருமூச்சு வீங்கினள், விழுந்தாள்]

நன்னெறியுய்க்கவோ வேறுதானுண்டோ தயையின்றித் தன் தனயனை அடவிக் ககற்றுகின்றான் நாயகன் எனக்கோசலை அவ்வரியநிலையிலும் ஆய்ந்துநின்ற தன்மையை, 'குழைதூங்குசெவி'யெனும்மொழிகள் புலப்படுத்துகின்றன. இதுவோ அன்றோ என்ன ஊசலாடிய அவள் உள்ளத்திற்கிசைந்து சிரமும் சிறிதசைந்திருக்குமாதலின், அவ்வசைவை ஏற்றுஆடிய குழையினின்று அவள் மனத்துறு நிகழ்ச்சியை நினைத்துக் கொள்ளலாம். இவ்வண்ணம் மனத்தொடு குழைகளும் அசையலாவதை,

வெள்ளத்தின் சடிலத் தான்றன்
வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத்
தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிகொண் டகன்ற காளை
அல்லன்கொ லாங்கொ லென்பாள்
உள்ளத்தி னூச லாடுங்
குழைநிழ லுமிழ விட்டார்

[கங்கையைச் சடையில் தரித்த சிவபிரானது கொடிய வில்லை ஒடித்து இப்பொழுது தன்னைக் கடிமணஞ் செய்துகொள்ள நிற்கின்ற இவ்வீரன்தான், முன் முனிவனோடு வீதிவாய்ச் சென்றபோது கன்னிமாடத்தினின்றுங் கண்ணுற்றநாள் தன் ஆவி தள்ளாடிச் சோர்ந்துநெகிழ ஒப்பற்ற தன் பெண்மையினை அள்ளிக்கொண்டு அகன்ற காளையே ஆவானோ அல்லனோ எனச் சிந்திக்கும் சீதையின் உள்ளத்தைப்போல ஊசலாடும் குழைகள் ஒளிதிகழும்படி அவளுக்குச் சிலதியர் இட்டனர்]

எனச் சித்தரித்திருந்த உண்மையைக் கருத்தினுட்கொண்டக்கால் கோசலையின் குழைகளுக் குரியதோர் விரித்தியுரையை ஈண்டுக் காணலரியதன்று. முன்னும் பின்னும் ஆய்ந்தனள்; கைதவமொன்று இதனிலுளதெனுங் ஐயுறவு தோன்றி,

வஞ்ச மோமக னேயுனை மாநிலந்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுவென் னாருயி ரஞ்சுமால்

[வஞ்சனையோ மகனே; இந்தப் பெரிய பூமி உனக்குத் தஞ்சமாகும்படி நீ காப்பாயாக என்று அரசன் மொழிந்த வார்த்தை விஷயமாய் விளைந்ததோ. இனி நான் உயிர் வாழ்வேனோ! அஞ்சுகின்றதே அஞ்சுகின்றதே, என் ஆருயிர் அஞ்சுகின்றதே]

என நைந்தனள். நானிலந் தாங்கென்று சொன்னபின் கானகம் ஏகென விதித்ததால், வஞ்சனை இதனில் உளதெனத் தெளிந்தனள். முடியினை அளித்த வாக்கே நஞ்சமும் ஆயிற்றென்ன ஓர்தலும் எளியதே.

இத்தகைய அரும்பெரும் பரிவுநிலைகளிற்றான் புலவரானோர் தம் கலைகலங் கடவாது காத்தல்வேண்டும். சிங்காரமும் சிரிப்பும் மிகைபட எழுந்ததெனினும் ஒருவாறு பொறுக்கலாம். கோபமும் வீரமும் சுவைகெட மிகைபடல் மிகவரிது. சோகத்திற்குரிய சுவையின் வரம்புதான் மிக நுண்ணிதாதலின் அதனைமிகவாதுசித்தரிக்க மனத்தினடக்கமும் கலையினது ஆற்றலும் சாலச்சிறந்த புலமையைக் கையாளல் இன்றியமையாததாகின்றது. இந்தச் சிறப்புக் கலையாமற் கைவந்தவர் கம்பர். 'வஞ்சமோ மகனே' என்னும் அவ்விரு சிறு சொற்கள் குலக்கோசலையின் உளைகின்ற இதயத்திலிருந்து எழுந்தவை. இவைபலால் இந்நிலைக்கு ஏற்றசொன் முறையறிந்து இயம்புதல் யார்க்கும் இயலாது. 'மாநிலம் தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம் நஞ்சமோ' என்னுஞ் சொற்களால் உளைகின்ற இதயத்தோடு நோகின்ற மனத்தின் நுண்மையும் நுவலப்படுகின்றது. இனித் தான் உயிர்வாழமாட்டாளென்பது முற்ற முடிந்தபொருள். 'அஞ்சும் அஞ்சும் என் ஆருயிர் அஞ்சும்' என்று குழைகின்றாள் கோசலை. குழைந்து,

கையைக் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்க்கும் விழுங்கும் புழுங்குமால்

[கையைக் கையோடு சேர்த்து நெரிப்பாள், தன் மைந்தனாகிய திருமால் பள்ளிகொள்ளும் ஆல் இலைபோன்ற தன் வயிற்றை வளைகள் அணிந்த தன்கைகளால் பிசைவாள். நெருப்புப் புகைபோல் நெடுமூச்சு விடுவாள். வாயைக் கூட்டி விழுங்குவாள். மனமும் மெய்யும் புழுங்குவாள்]

நன்று மன்னன் கருணை யெனநகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று போவ தெனவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றது போலுமே

[மன்னவன் வைத்த கருணை நன்றாயிருக்கின்றதென்று சிரிப்பாள். எதிர்நின்ற இராமனை நோக்கி, "பெருங்காட்டிற்கு எப்பொழுது போவது" என்று வினவித் தானும் அவனுடன்போக ஆயத்தமாவாள்போல் எழுந்திருப்பாள். உயிர்போய்போது படுகின்ற மரணவேதனை அவ்வளவும் பட்டாள்]

அன்பி ழைத்த மனத்தா சற்குநீ
யென்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் புலம்பினர் போலவே

[உன்னிடத்தில் எப்பொழுதும் அன்பையே செய்யும் மனதுடைய அரசனுக்கு நீ என்ன குற்றஞ் செய்தனை' என்று கூறிநின்று, முற்பிறவியில் செய்த தீவினைகளின் பயனாய் வருத்தியிருந்த வறுமை முடிந்து, பெற்ற செல்வத்தை மறுபடி இழந்துவிட்டுப் புலம்புகின்றவர்களைப்போல் ஏங்கினாள்]

பெருந்துயர் பிடித்துந்தத் தள்ளாடிய உள்ளத்துக் கோசலை நடுநிலை தளர்ந்து, 'நன்று மன்னன்கருணை', என்று தன் நாயகனை நொந்ததும் தகாதெனத் தேர்ந்தாளாகி "அன்பிழைத்த மனத்தரசற்கு நீ என்பிழைத்தனை" எனச் சிந்தித்து வினவினாள். இனி, நம்பியின்பால் பிழையுளதென அயிர்த்தலும் அமையாதெனத்துணிந்து, "அளியென் செய்த தீவினையே அன்றில்லாக வந்தாயோ" எனமுன் தெருண்டுரைத்த தன் மருகியேபோல்,

அறமெனக் கில்லையோ வென்னு மாவினைத்
திறவ டுத்ததென் றெய்வதங் காளெனும்
பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்

[அறமென்பது எனக்குத்தான் இல்லாமற் போயிற்றோ என்பாள். தெய்வங்களே, என் உயிர் நைந்து அழியும்படி இது அடுத்தது ஏன்: என்பாள். வேறுபல உரைப்பானேன். கன்றைப் பிரிந்தபோது வருந்தும் ஓர் தாய்ப்பசுவைப்போல உருகிக் கரைந்து வருந்தினாள்]

... அவள் வருந்திபவாறெல்லாம் வேறுவேறு உரைப்பானேன், என்றனரோ கம்பர்; அல்லது வருந்திய தற் குவமைபாகக் கன்று பிரிந்த கறவை அன்றி வேறொன் றுரைப்பானேன் என்றனரோ அறியோம். தன்முன் இராமன் வரக்கண்ட கோசலை, "ஒரு பெண் குதிரை தனது இளங்குட்டியைக் கண்டாற்போல், மிக்க சந்தோஷத்துடன் இராமருக்கு எதிர் சென்றாள்" என்றும், பிறகு அவன் பிரிவினை அறிந்து வருந்தியபோது, "பாரஞ் சுமக்குங் குதிரை பூமியிற் புரண்டால் அதன் தேகம் எவ்வண்ணம் இருக்குமோ அவ்வண்ணம் அவள்தேகம் புழுதி படிந்திருந்தது" என்றும் பெண்குதிரை யுவமைய வான்மீகிமுனிவர் கோசலைக்குத் தொடர்த்திய கொள்கைநோக்கி, அந்தச் சித்திரம் கம்பர் மனக்கண்ணிற்கு இயல்புடன் அமையாமையால் மெல்லென அதனை மறுத்துக் "கன்றுபிரிந்துழிக் கறவையொப்பக் கரைந்து கலங்கினாள்" என்பதன்றிபே, குதிரையனைய பிறவற்றை மெல்லியற் குலக்கோசலையுடன் சார்த்தி உரைப்பதென்னென இரங்கினர் போலும்.

இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினோய்
பொய்த்தி றத்தின னாக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயென

[இப்படித் துயர்படும் கோசலையை இராமன் தன் கைகளால் எடுத்து, "அரிய கற்புடையவளே, மெய்யின் திறமுடைய நம் வேந்தனை நீ, பொய்யனெனக் கொள்கின்றாயோ" என்று]

பொற்பு றுத்தன மெய்ம்மை பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினான்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
வற்பு றுத்தி மனங்கொளத் தேற்றுவான்

[கற்பின்தன்மை இன்னதென்று உலகத்திற்கு அறிவுறுத்தியவோர் கற்புடையவளாகிய கோசலையை உறிதிப்படுத்தி மனங்கொண்டு தேற்றும் பொருட்டு, அழகு வாய்ந்தனவும் மெய்ம்மை தங்கினவும் ஆகிச் சொல்வதற்கு உரியவைகளைச் சொன்னான்]

சொல்லி, தந்தையை மறந்தும் தான் பொய்யனாக்கலாகாதெனவும், பூதங்களைந்தும் அழிந்தேகினும் அண்ணல் ஆணையைத் தன்னால் மறுக்க ஒண்ணாதெனவும் எடுத்துக்காட்டி "இதற்கு நீ உள்ளழியேல்" என்று தனதன்னையை வேண்டலும் கற்பெலாங் கனிந்த சிந்தைக் கோசலை,

ஆகி லைய வரசன்ற னாணையால்
ஏக லென்பதி யானுமு ரைக்கிலேன்
சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
போகி னின்னொடுங் கொண்டனை போகென்றாள்

[ஆயின், மைந்த, அரசனது ஆணைப்படி நீ போகாதே என்று நானுஞ் சொல்லவில்லை. சாகாமல் உயிரொன்றைச் சுமக்கவல்ல ஒரு வன்மையையுடைய என்னையும் நீ அடவிக்குப் போம்போது, உன்னுடன் அழைத்துக்கொண்டேனும் போ" என்றாள்]

கற்புறுத்திய கற்புடையாள்தன் மனம் காதன் மைந்தன் பிரிவெனுங் கொடுமைபால் நிலைகலங்கியிருந்ததுபற்றியே தன் நாயகனைத் துறப்பள் என்ற சொற்களை அவளுதடுகள் உரைக்க நேர்ந்தன. அன்னைக்கிதுவும் அடுக்காதென இராமன் உன்னினான். உன்னி,

என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறு
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானகம் படரத் துணிவதே
அன்னை நீரறம் பார்க்கிலி ராமென்றான்

[என்னைப்பிரிந்து துயரக்கடலில் முழுகுகின்ற சக்கிரவர்த்தியை உறதிபடத் தேற்றியிராமல், என்னோடு அடர்ந்த காட்டில் திரியத் துணிவதுதகுமோ; அன்னையீர் நீர் உமக்குரிய தருமத்தை நோக்கவில்லை போலும்]

என்ன அவள்கற்பினைத் தெருட்டிக்காட்டினான். உயர்த்திவைத் தொரு பலர்பால் வழங்கினானெனின் இராமன் மனத்தை ஏதோ உறுத்துகின்றதென ஊகிக்கலாம். 'தந்தையே ஏவ நீரே உரைசெய' என்று முன் கைகேசிக்கு உரைத்ததன் எதிரொலிபோல் ஈதுளது. முன்னும் பின்னும், தன்னையீன்றவள் என்ற உரிமையில் கோசலையை 'நீ' எனக் குறித்துவந்த செம்மல் இங்கு மாத்திரம் 'நீர் அறம் பார்க்கிலிர்' என்றதன் இரகசியம் இன்னதேயாம். இந்தத் தன்மை இவன் தம்பி பரதனிடத்துங் காணலாம். வஞ்சனையாற் கவர்ந்த மண்ணைத் தன்வாய்ப் பெய்யவந்த கைகேசிக் கொடியாளைப் பரதன்,

நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரேநீ ரின்ன மிருக்கப் பெறுவீரே
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்னு மெனக்கென் றருவீரே

என இடித்துரைத்தபோதும் பலர்பால் வாசகத்தால் கழறலுற்றான்.

மெல்லென இன்னணம் உரப்பிய தன்மொழியினைத் தொடர்ந்து இராமன், தனதன்னையைப் பலவகைகளிற் றெருட்டலும் அவள், எப்படியும் இராமன் தன்னைவிட்டுக் காடேகத் துணிந்துளான் என்பதறிந்து,

அவனி காவல் பரதன தாகுக
இவனிஞ் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகை காப்பென் றகவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினாள்

[இராஜ்ய பரிபாலனம் பரதனுக்கே ஆகட்டும். இராமன் நாட்டைவிட்டுக் காட்டிற்குச்சென்று தவம்செய்யாமல், தகவற்ற வேந்தனைத் தொழுது நான் வரம்வேண்டி, தடுப்பேன்" என்று போயினாள்]

இக்காட்சியைக் கம்பர் நிகழ்த்தி முடிக்குமாறு இவ்வாறு. இதனுடன் இனி முதனூல் சித்திரத்தை ஒப்பு நோக்குவோம்.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[326-வது பக்கத் தொடர்ச்சி]

நான்காம் அங்கம்

இரண்டாங் களம்

இடம்:—பிஸாரோவின் கூடாரம்.

[பிஸாரோ ஓர் கட்டிலில் படுத்துறங்குகின்றான்]

பிஸாரோ:— (தூக்கத்தில்) இரக்கமா, உனக்கு? பாதகா!—உம், மார்பினைப் பார்த்துக் குத்துங்கள்! ஒதுங்கி நில்லுங்கள், எங்கே, இரத்தம் பெருக நான் கண்ணாரக் காணட்டும்!—ஹ,ஹ,ஹா! இன்னுமொரு முறை—ஏதோ! நான் அம் மறுகலைக்கேட் டனுபவிக்கட்டும்.

(ரோலாவும் எல்விராவும் வருகின்றனர்)

எல்விரா:—அதோ! ஒரு நிமிஷம் தாமதிக்காதே, —இப்பொழுது.

ரோலா:—ஆம்! நீ இங்கே இருக்கலாகாது. இவ் இரத்தக்களம் பெண்ணொருத்தி பார்த்திருக்கத் தக்கதன்று.

எல்விரா:—ஆம், ஒரு நிமிஷமும் நீ தயங்கினால்:—

ரோலா:—போ, உன் அந்தப்புரத்திற்குப் போய் விடு. மறுபடி இங்கே வராதே. நீ இருக்குமிடம் நானே வந்து சேருவேன். நீ இக்கொடிய காரியத்தில் கலந்துகொண்டதாகத் தெரியவேண்டாம். வேண்டிக் கொள்கின்றேன்.

எல்விரா:—நல்லது நான் காவற்காரனையும் அழைத்துச் செல்கின்றேன். (போகின்றாள்)

பிஸாரோ:—(தூக்கத்தில்) போங்கள்! ஐயோ, போய் விடுங்கள்! இரக்கமற்ற அரக்கர்களே! என் மார்பை இப்படிக் கிழிக்க வேண்டாம்.

ரோலா:— இல்லை! நான் எண்ணியது தவறு—ஆருயிர் அமர்ந்துவைகும் நறுந்துயிலின் இனிமையையும் துய்ப்பனோ இப்பாதகன் இனி. இதோ பாருங்கள், பேராசை கொண்ட பெருமடையர்காள்! செறிந்த செருக்கொடு மாறுடஇரத்தம் பருகுதற்கு நாவலைத் துழலும்பேயின் அமைதியைப்பாருங்கள். இதோ, இவனென் கத்தியின் நுனிக்கு இலக்காகிக் கிடக்கின்றான்—ஒரே குத்து. சே! கூடாது. எனது மனமும் காயமும் மறுக்கின்றன. ரோலா ஒருபொழுதும் கொலையாளி யாகமாட்டான்! எல்விராவையுமோ காப்பாற்ற வேண்டும் (கட்டிலருகில் வந்து) பிஸாரோ, எழுந்திரு!

பிஸாரோ:—(திடுக்கிட்டெழுந்து) யார்! சேவக!—

ரோலா:—பேசாதே—இன்னொரு மொழி உன் மரணம். உதவிக்குக் கூப்பிடாதே. உன் மெய்க்காப்பாளர் வருவதைவிட வேகமாய் இக் கை காரியத்தை முடித்துவிடும்.

பிஸாரோ:—நீ யார்? உனக்கென்ன வேண்டும்?

ரோலா:—நான் உன் சத்துரு—பெருவிய ரோலா—உன்னைக் கொல்லவோ வேண்டா மெனக்கு. அது வாயின் நீ தூங்குகையிலேயே கொன்றிருப்பேனே!

பிஸாரோ:—சொல்! இன்னுமென்ன!

ரோலா:—நீ இப்பொழுது என் இரக்கத்திற் காளாகிக் கிடக்கின்றாய். இதற்குப் பதிற்சொல். இதுவரையில் பெருவியன் ஒருவன், உனக்கேனும் உன் இனத்து ளெவனுக்கேனும் எவ்விதக் கொடுமையாயினும் இழைத்திருக்கின்றானா? மற்று நீயேனும் உன் இனத்தவரி லெவரேனும் கைப்பட்ட பெருவியனொருவனுக்காகிலும்இரக்கமென்பது காட்டிய நாளொன்றுண்டோ? இரண்டுமில்லை. இப்பொழுது ஒரு பெருவியன் பழிவாங்குவ தெவ்விதம் என்பதுணர்வாய். உனக் கிதயம் என்பதொன்றுண்டானால் நன்கு யுணர்வாய். (கத்தியைப் பிஸாரோவின் காலின்கீழ்ப் போட்டுவிடுகின்றான்) அதோ!

பிஸாரோ:—என்ன விந்தை யிது!

(ஒருபுறமாய்த் திகைத்து நிற்கின்றான்.)

ரோலா:—பிஸாரோவும் இதைக் கண்டு வியப்பனோ? தங்களுக் கிழைத்த தீங்கைப் பொறுத்திட வேண்மென்பது, கிறிஸ்தவ கோட்பாடுகளுள் ஒன்றென்று எண்ணி யிருந்தேன். ஆனால் உண்மையில் அதை—பெருவியரேனும்—கையாளக் காண்கின்றாய்!

பிஸாரோ:—ரோலா! உண்மையில்என்னைநீ திகைக்கச் செய்துவிட்டனை—என்னை நீ இன்று வென்றடக்கிவிட்டனை. (கலங்கி உலாவுகின்றான்.)

[எல்விரா வருகின்றாள்]

எல்விரா:—ஆய்விட்டதா? மாண்டனனா அவன்? (பிஸாரோவைப் பார்க்கின்றாள்) என்ன! இன்னும் உயிருடனா? ஆயின் என்குடி கெட்டது.கடைகெட்ட பெருவியர்களே, உங்களுக்கினி மனமிரங்குவதில்லை! ஓ ரோலா! இதென்ன, மனக்கலக்கமோ, கைதவச் செய்கையோ?

பிஸாரோ:—என்ன! இப்படியும் கூட—

ரோலா:—போ!—எல்விராவிற்குத் தான் இன்ன பேசுகின்றாளென்பதுதெரியாது.(எல்விராவைப்பார்த்து) என்னைப் பிஸாரோவுடன் தனியே விட்டகல்—போய்விடு—

எல்விரா:—ரோலா, என்ன! நான் பின்வாங்குவேனென்று எண்ணுகின்றனையோ? அக் கொடியோனின் மார்பினுட் செலுத்த உன் கையில் நானே ஒரு கத்தியை வைத்தேன் என்பதைப் பயந்து இனிமறுப்பேனோ! இல்லை. எனக்கிருக்கும் வருத்தமெல்லாம் நானே செய்யாமற் சக்தியற்ற உன் கைகளை நம்பிக் கத்தியைக் கொடுத்தேனே என்பதுதான். இம்மனிதன்பொருட்டு நீ காட்டிய இரக்கத்திற்கு நேர்க் கைம்

மாறு உன்குலத்திற்கு நாசந்தான் என்பதை நீ மிக விரைவிற் கற்றுணர்வாய்—பேதையே, போ!

பிஸாரோ:—யாரங்கே, சேவகா! கடிதின் வா! ஆவேசங்கொண்டிருக்கும் இந்தக்கயத்தியை இழுத்துச் செல்.

எல்விரா:—ஆம். சேவகனைத்தான்—நானும் கூப்பிடுகின்றேன் அவர்களை. வெகுசீக்கிரம் அவர்களென்னைக் கொலைக்களம்கூட்டிச் செல்வார் என்பதும்தெரியும். ஆனால் பிஸாரோ,—உன் கண்கள் என்னதான் அழலெழக் கக்கினாலும்—என் மனத்திடம் ஓரணுக் குறையும் என்றெண்ணாதே. அல்லது, மாதொருத்தியின் கோபமும் பகையுமே அவளை இக் காரியத்துட் தூண்டினவென்றும் நினைக்காதே. அதுவே காரணமாயின்,—இந்தத்தோல்வியால்,—நான் அவமானத்திலும் ஆன்மநிந்தனையிலு மன்றோ ஆழ்ந்து கிடக்க வேண்டும். ஆனால், நான் இவ்விதம் தோல்வியுற்று அழிவடைந்தாலும் எனது நோக்கத்தின் மேன்மை எத்தன்மைத்து என்ப தறிவேன். முயற்சியிலேயே எனக்குக் கீர்த்தியுண்டு. கோடிக்கணக்கான ஒன்றுமறியாப் பேதைகளை—உன்னை மறுவுலகனுப்பி இரத்தப் பிசாசின் நகங்களினின்று மீட்டவே நான் இக் காரியம் செய்யப் புகுந்தேன் என்பதைப் பெருமையுடன் முறையிட்டவண்ணமே வாய்ப்பிராணன் விடுவேன்.

ரோலா:—நோக்கத்தினளவு மேன்மை செய்கைக்கு மிருக்குமாயின் ரோலாவுமதைச் செய்யச் சலிப்பனோ? (மெய்க்காப்பாளர் வருகின்றார்.)

பிஸாரோ:—தன் உருவத்தைக் காட்டிநிற்கும் இவ்வரக்கியைப் பிடியுங்கள். உங்கள் தலைவனைக்கொல்ல முயன்றா ளிவள்.

எல்விரா:—உங்கள்மேல் ஆணை — தொடவேண்டாமென்னை—ஏ, ஏ! கயவர் தலைவ, யான் உரைப்பதைக்கேள். ஓ, ஓ, ரோலாவோ. யானுன்னைப் பொறுத்தனென். உன்பெருந்தகைமைக்கே யானின்றுஇரையாயினேன். எனினும் நானுன்னை வியக்காம லிருக்க இயலவில்லை. மற்றென்! நானேதான் என்னுடைய நாசத்தைத் தூண்டிக்கொண்டேன் — நீ என்னைக் காப்பாற்றியு மிருப்பாய். உனது நிந்தனை கல்லறை வரையில் என்னைப் பின்பற்ற வேண்டாம் ஆதியில் இப் பொய்மிகு புலையன் என்னென்ன தந்திரங்களால் கபடமற்ற என்கற்பிற்குச் சுரங்கம் வைத்தான் என்பதுமாத்திரம் உனக்குத் தெரிந்தால்!— நான் வாழ்ந்திருந்த கன்னிமாடத்தில், நம்பியிருந்தவர்களை மோசத்தினாலும் இலஞ்சத்தினாலும் எவ்விதம் கெடுத்து—மதிமயங்கி நின்ற வென்னை, படிப்படியாய்ப் பாவப் படுகுழியில்—

பிஸாரோ:—என்ன! கட்டளையைக் கேளீர்களோ! இழுத்துச் செல்லுங்க ளவளை இவ்விடம்விட்டு.

எல்விரா:—ஆனதாய்விட்டது—என் சரித்திரம் முழுவதும் உனக்குத் தெரியுமாயின், ரோலா, என்னைக்கண்டு நீ மனமிரங்குவாய்.

ரோலா:—பஞ்சபூத சாட்சியாய் என் உள்ளம் இன்று உருகுகின்றது.

பிஸாரோ—கழுதைகளா! சிறைக்கூடங் கொண்டு போய்த் தள்ளுங்கள்!—கழுமரம் இங்கிடமே நாட்டவேண்டும்.

எல்விரா:—க்ரூரச் சேவகர்களே! ஒருநிமிடம்—உங்கள் தலைவனைப் புகழ்பாடித் துதிக்கத்தான் — ஒருதரமாகிலும் பிஸாரோ நியாயதண்டனை விதித்தான் என்பதைத் திகைத்துநிற்கும் உலகிற்குச் சொல்ல வேண்டும். ஆம். மனித புத்தி தனக்கு எட்டியவரையில் சிருஷ்டித்திருக்கும் கருவிகளைக் கொண்டு என்னைச் சித்திரவதை செய்யுங்கள். அது நியாயந்தான். ஆம். இவ்வாட்களைவிட்டு, உன்னைத் தழுவி இன்புற்ற இப்பாழுங் கரங்களின் நரம்புகளையெல்லாம் துண்டு துண்டாய் வெட்டச்சொல். காதலும் வணக்கமும் பெருக உன் வதனத்தைக் கண்டு மலர்ந்த இக் கண்களில், பொங்கும் ஈயத்தைப் பாய்ச்சக் கட்டளையிடு. பிறகு நீயே பாகனாய் உய்த்துவந்து, நாமிருவரும் உலாப்போந்து உவந்துள தேரினை என் மார்புமேற் செலுத்தி உனக் கொருகாலத்தில் தலையணையாய் இருந்து மானமிழந்த இம்மார்பு மரணவேதனையில் துடிப்பதைக் கண்குளிரக் கண்டு களித்திடு. இவைகளெல்லாம் நான் பொறுப்பேன். ஏனெனில் அவ்வளவும் எனக்கு நியாயமாகும். இறுதியில், கதறிக்கதறி யான் கூக்குரலிடுவதைச் செவிமடுத்து நீ இன்புற வேண்டி என்னை இரண்டுபடக் கிழிக்க அவர்களுக்குக் கட்டளை யிடுவாயாயின், அப்பயன் எய்தாது நீ வீணே விழிப்பாயே! ஏனெனில் புலம்பிக் கூக்குரலிடமாட்டேன். இப்பொழுது என் ஆன்மா உன் அதிகாரத்தை அலட்சியஞ் செய்வது போலவே, கடைசிவரையில் என் உடலின் பொறுமை உன் குரூரத்தையும் இலட்சியஞ் செய்யாது.

பிஸாரோ:—கையிற் கொலைகொண்டு நிற்கும் இப் பாதகி சொல்வதற்கும் செவிகொடுக்கின்றனையோ?

ரோலா:—ஆம்! இவள் புகல்வது பொய்யேயாயின் நீ யதைக் கேட்பதற்கு இவ்வளவு கூசமாட்டாய். உண்மையாயின், உன் மனச்சாட்சி யுன்னைப்படுத்தும் துன்பங்களில் அரையளவுகூட உன்மூர்க்கம் அவள் சரீரத்திற் குண்டாக்க முடியாது. ஏன் வீணே முயல்கின்றாய்!

எல்விரா: — ஹ! பிரபஞ்சமே போகின்றேன். ரோலா, போய் வருகின்றேன். (பிஸாரோவைப்பார்த்து) விடைகொடுக்க வேண்டும், ஏ நகரத்தை அரசுகொண்ட நாயகா, காமக் குரோதாதிகள் தவிர வேறொன்றிற்கும் உன் இதயத்தில் இடமில்லை — நாமிருவரும் இன்னொரு இடத்தில் நிச்சயமாய்ச் சந்திக்கப் போகின்றோம் என்பதை எண்ணி எண்ணி உயிர்வாழ் இங்கே. நீ கடைசியாகக் கண்மூடும் பொழுது நிர்க்கதியான உனதான்மா தவித்துருகுமே, அப்பொழுது, என்னைக் கன்னிமாடத்தினின்று வஞ்சித்து வெளிக்கொணர்கையில் என் புனித குருவார் இட்ட சாபமெல்லாம் உன் செவியில் தொனிக்கும். தன்குழந்தையைக்கெடுத்தவனைத் தெய்வமே தண்டிக்கவேண்டுமென்று கதறி மரித்த என் தாயின் கூக்குரல்! இரத்தம் உறைந்த வாயுடன் முறுகி மடிந்த என் தமயனின் மரணக் கதறலும்—அட சண்டாளா! தன் தங்கைக் கிழைத்த மானபங்கத்திற்கு உத்தரம் கேட்ட அவனையும் கழுத்தைப் பிடித்துக் கொன்றனையே, கொடிய பாதகா! அவைகளெல்லாம் எனக் கிப்பொழுது கேட்கின்றன! இந்த நினைவே என் உணர்வை உழக்கி மாய்க்கின்றது. நமன் வந்திழுக்கும்போது உனக்கெப்படித்தான் இருக்குமோ பார்த்துக்கொள்!

பிஸாரோ:—ஒரு நிமிடம் இன்னும் தாழ்வீர்களாயின்—உங்களுயிர் உங்கள்—

எல்விரா:—முடித்து விட்டேன்—கடைசி மானுடசபலமும் ஆய்விட்டது. இனி, கலங்கா நெஞ்சத்துடனும் அசையாத் திட்பத்துடனும் என்விதியை யனுபவிக்கப்போகின்றேன். நான்சிறப்பாய் வாழாதது பிஸாரோவின் செய்கை. ஆனால் சிறப்புடன் சாவது எனதே.

(சேவகர்களுடன் போகின்றாள்)

பிஸாரோ:—ரோலா, மேன்மையும் கீர்த்தியுமுள்ள உன்னைப்போன்ற வீரனொருவன், ஆவேசம் கொண்டு பிதற்றும் இவ்வபலையின் கட்டுக்கதைகளை நம்பலாகாது. இக் கடுஞ் சொற்களுக்கெல்லாம் காரணம்—ஹா! இக் கலகக்காரன் அலான்ஸோமீதிவள் கொண்டிருக்கும் காமமிகுந்த மோகந்தான் காரணம். எனது சிறையிலவன்—

ரோலா:—அலான்ஸோ உன் சிறையிலில்லை.

பிஸாரோ:—என்ன!

ரோலா:—ஆம். அவனை மீட்ட வந்தேன்—காவற்காரனைவஞ்சித்துக் காரியத்தைச்சாதித்தும்விட்டேன் நானே உன்வயத்தனாகி யிருக்கிறேன் இப்பொழுது.

பிஸாரோ:—அலான்ஸோ தப்பிவிட்டனனா! ஆயின் என்இதயம் தனக்கினிய பழியைத் தீர்த்துக்களிக்கும் அரும்பேறு பெறவில்லையோ?

ரோலா:—இவ்வித விகாரங்களை உன் இதயத்தினின்றும் துரத்திவிடு. அப்பொழுதே அதற்கு அமைதி நீ தேடுபவனாவாய்.

பிஸாரோ:—ஒருங்கே என்மேற் பாயும் ஒருகோடி பகைவர்க்கும் என்னால் மார்கொடுக்க முடியும். ஆனால் என் இயற்கையுடன் இகல்வதற்கோ இயலாதே.

ரோலா:—ஆயின், பிஸாரோ, வீரனென்று பேர் எடுக்கும் வீணாசை ஏனுனக்கு? தன்னையே தான் வெல்வதிலுள்ள வெற்றி யொன்றிலேயே ‘அதிர்ஷ்டம்’ என்று சொல்வதற்கு இடமில்லை. சாதாரணப் போரில் தற்செயலாய் வெற்றிமாலை உன்கழுத்திலிருந்து நழுவி விடலாம். அல்லது தற்செயலாய்க் கிரீடமொன்று உன் தலையி லேறினாலும் ஏறலாம். உன்னுடனேயே நடக்கும் உட்போரில்—திடமாய் மாத்திரம் இருப்பாயாயின்—நல்லியல் நினைவுகளே அந்தத்தில் நிரந்தர வெற்றிபெறும்.

பிஸாரோ: — பெருவியனே! நானுன்னிடத்தில் நன்றியற்ற துரோகியா யிரேன். நீ யுன் இருப்பிடம் செல்—உன்னை விடுதலை செய்துவிட்டேன்.

ரோலா:—இதில் நீ கவுரவத்தையும் கடமையையுமே கடைப்பிடித்து நடக்கின்றாய்.

பிஸாரோ:—உன்னைக் கண்டு ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லை. ரோலா, நாமிருவரும் மித்திரர்களா யிருக்கலாகாதா!

ரோலா:—போய் வருகின்றேன்! எல்விராமீது இரக்கம்கொள்! நன்மைக்கு நண்பனாக முயற்சிசெய்—அப்பொழு தெனக்கும் நண்பனாவாய்.

(போகின்றான்)

பிஸாரோ:—பேராசையே! நான் பின்பற்றி வந்த மாயை யின்னதென்று சொல். எனக்கே உரியதான அவ்வொரு இன்பம்எங்கே? எனது புகழ் அழுக்காற்றிற் கடையாளம். எனது காதல் துரோகத்திற்குக் கைநெகிழ்ந்தபேதை. எனதுமகிமைக்கு என்னிடம் கற்றசிறுவனாலேயே கிரகணம். எனது பழிதீர்க்கும் நோக்கமும் காட்டுமிராண்டிப் பகைவ னொருவனின் முரட்டபிமானத்தால் தோற்கடிக்கப்பட்டு நிந்தனையும் பெற்றது—அவனது ஆவியின் சுய மகிமையைக் கண்டு நான் மயங்கி அமிழ்ந்துவிட்டேன்! நான் வந்தவழியே மீண்டால் நலம்—இல்லை, அந்நிலை கடந்துவிட்டேன். இவ்வித ஆன்மநிந்தனைகளினின்று தப்பினால் போதுமே! இல்லை. நினைவினது இருளே எனதுநரகம்.

(போகின்றான்.)

அப்பர்

அப்பரும் அறுபத்தினான்கு கலைகளும்.

24. யோகம்

[324-வது பக்கத் தொடர்ச்சி]

(V) தியானம்:—உலகவழக்கில், தியானமென்பது சிறிதுபோது கடவுளைச் சிந்திப்பது எனப் பொருள்படும். அத்தகைய சிந்திப்பும் புறத்திலுள்ள ஆசாபாசங்களால் அலைக்கப்பட்டு நிற்றலால், அப்பர் மொழிவதுபோல்,

கணத்திடை யாக்கை பேணி
    நியமஞ்செய் திருக்க மாட்டேன்
மணத்திடை யாட்டம் பேசி
    மக்களே சுற்ற மென்னும்
கணத்திடை யாட்டப் பட்டுக்
    காதலா லுன்னைப் பேணுங்
குணத்திடை வாழ மாட்டேன்
    [illegible] ரட்ட னீரே.
        திரு[illegible] வீரட்டம் - திருநேரிசை - 9.

இதற்குக் காரணமென்னவெனில் * இருளற நோக்காமையும், அவ்வழி நில்லாமையுமே யாம் †. அதைக் கீழ்வரும் பாக்களில் அப்பர் விளக்குவதைக் காண்க.

செத்தையேன் சிதப்ப நாயேன்
    செடியனே னழுக்குப் பாயும்

* மறந்து மற்றிது பேரிடர் நாடொறுந்
திறம்பி நீநினை யேல்மட நெஞ்சமே
புறஞ்செய் கோலக் குரம்பையி லிட்டெனை
யெறும்பி யூரான் செய்த வியற்கையே.
        திருவெறும்பியூர் - திருக்குறுந்தொகை 7.

† வந்து கேண்மின் மயல்தீர் மனிதர்காள்
வெந்த நீற்றன் விசையமங் கைப்பிரான்
சிந்தை யால்நினை வார்களைச் சிக்கெனப்
பந்து வாக்கி யுயக்கொளுங் காண்மினே.
        திருவிசையமங்கை - திருக்குறுந்தொகை 9.

போத்தையே போற்றி நாளும்
புகலிட மறிய மாட்டேன்
எத்தைநான் பற்றி நிற்கேன்
இருளற நோக்க மாட்டேன்
கொத்தையேன் செய்வதென்னே
கோவல்வீ ரட்ட னீரே. (1)

தலைசுமந் திருகை நாற்றித்
தரணிக்கே பொறைய தாகி
நிலையிலா நெஞ்சந் தன்னு
ணித்தலு மைவர் வேண்டும்
விலைகொடுத் தறுக்க மாட்டேன்
வேண்டிற்றே வேண்டி யெய்தேன்
குலைகொண்மாங் கனிகள் சிந்துங்
கோவல்வீ ரட்ட னீரே. (2)

வழித்தலைப் படவு மாட்டேன்
வைகலுந் தூய்மை செய்து
பழித்திலேன் பாச மற்றுப்
பரமநான் பரவ மாட்டேன்
இழித்திலென் பிறவி தன்னை
யென்னினைந் திருக்க மாட்டேன்
கொழித்துவந் தலைக்கும் தெண்ணீர்க்
கோவல்வீ ரட்ட னீரே. (3)

திருக்கோவல் வீரட்டம் - திருநேரிசை.

தியானமானது, பலவகைப் பாசபந்தங்களாற் சிதறுண்டுபோகின்றதென்று திருநாவுக்கரசும் முறையிட்டால் நம்மைப்போன்றவர்கள் யாது கூறலாம். ஆகையால் நிலையாய்த் தியானம் நடத்த உபாய மெப்படி? மேற்கூறிய யோகப்படிகள் ஏற முயல்வதுடன், காலைமாலை * இவற்றின் தொடர்ச்சி விடாது சிவபெருமானைச் சிந்தித்தலாம்.

ஈச னீசனென் றென்று மரற்றுவன்
ஈசன் றானேன் மனத்திற் பிரிவிலன்
ஈசன் றன்னையு மென்மனத் துக்கொண்டு
ஈசன் றன்னையும் யான்மறக் கிற்பனே.
ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேற்றப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப்பெற் றேனினி
ஈசன் றனினைவும் யான்மறக் கிற்பனே.
—மறக்கிற்பனே யென்னும் திருக்குறுந்தொகை 34.

தியானம் நிர்மலமாய்ச் செய்யுங்காலத்தில் எய்தும் அநுபத்தை அப்பர் கீழ்வரும் பாசுரத்தால் விளக்குவார் போலும்:—

துறவாதே யாக்கை துறந்தான் றன்னைச்
சோதி முழுமுதலாய் நின்றான் றன்னைப்
பிறவாதே யெவ்வுயிர்க்குந் தானே யாகிப்
பெண்ணினோ டாணுருவாய் நின்றான் றன்னை
மறவாதே தன்னிறமே வாழ்த்துந் தொண்டர்
மனத்தகத்தே யனவரத மன்னி நின்ற
திறயானைத் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே.
—திருமுதுகுன்றம்—திருத்தாண்டகம் 8.

சிவத்தியானத்தில் * மூழ்கிய ஜீவனானவன் தன்னையும் தனக்கு ஆதாரத்தலைவனையும் கண்டு ஆநந்திப்பானென்பது திண்ணம்.

மிக்கானைக் குறைந்தடைந்தார் மேவலானை
வெவ்வேறா யிருமூன்று சமயமாகிப்
புக்கானை யெப்பொருட்கும் பொதுவா னானைப்
பொன்னுலகத்தவர்போற்றும்பொருளுக்கெல்லாந்
தக்கானைத் தானன்றி வேறொன்றில்லாத்
தத்துவனைத் தடவரையை நடுவு செய்த
திக்கானைத் திருவீழி மிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே.
திருவீழிமிழலை - திருத்தாண்டகம் 7.

அவ்வாறு தலைவனைக்கண்டு ஆனந்தித்த † ஜீவன், அத் தலைவன்வேறு தான்வேறு என்பதற்கு இடமில்லாமல் தன்மை முன்னிலை படர்க்கை யென்னும் மூவிடங்களில், முன்னிலை யென்னும் பாகுபாடு காணப்படாமையால் படர்க்கைப்பொருளும் காணாது திகைப்பான்.

நீயேன நானேன வேற்றில்லை யென்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து தடுத்தடிமைச்
சேயெனக் காத்தனை யேபர மேநின் திருவருளுக்[னே
கேயென்ன செய்யுங்கைம் மாறுளதோசுத்த ஏழைய
தாயுமானவர்.

நீயே நான் என்று நினைப்பும் மறப்புமறத்
தாயே யனையவருள் தந்தாய் பராபரமே.
ஷை

யோகமுறையை நன்குணர்ந்தும் வன்றொண்டர், திருவதிகை வீரட்டானத்திற் பாடிய பதிகத்தில் தானும் பரமனும் ஐக்கியமானநிலையை அடியில் வரும் அப்பதிகத்தின் நான்காவது பாசுரத்திற் காண்க:—

நாற்றானத் தொருவனை நானாய பரனை
நள்ளாற்று நம்பியை வெள்ளாற்று விதியைக்
காற்றானைத் தீயானைக் கடலானை மலையின்
றலையானைக் கடுங்கலுழிக் கங்கைநீர் வெள்ள
ஆற்றானைப் பிறையானை யம்மானை யெம்மான்
றம்மானை யாவர்க்கு மறிவரிய செங்கண்
ஏற்றானை யெறிகெடில வடவீரட் டானத்
துறைவானை யிறைபோது மிகழ்வன்போலியானே.
சுந்தரர்.

இந்நிலையை திருநாவுக்கரசு நாயனாரும் ‡ தியான ஒளியை வெளியாக்கும் அடியிற் கண்ட பாசுரத்திற் காணலாகும்.

* பிறப்பு மூப்புப் பெரும்பசி வான்பிணி
யிறப்பு நீக்கியிங் கின்பம்வந் தெய்திடும்
சிறப்பர் சேறையுட் செந்நெறி யான்கழல்
மறப்ப தின்றி மனத்தினுள் வைக்கவே.
—திருச்சேறை—திருக்குறுந்தொகை. 3.

*மனத்துண் மாயனை மாசறு சோதியைப்
புனிற்றுப் பிள்ளை வெள்ளைம்மதி சூடியை
யெனக்குத் தாயையெம் மானிடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததென் னுள்ளமே.
திருவிடைமருதூர் - திருக்குறுந்தொகை.

† தன்னு ருவையொ ருவர்க்க றிவொணா
மின்னு ருவனை மேனிவெண் ணீற்றனைப்
பொன்னு ருவனைப் புள்ளிருக்கும் வேளூர்
என்ன வல்லவர்க் கில்லை யிடர்களே.
திருப்புள்ளிருக்கும் வேளூர் - திருக்குறுந்தொகை - 4.

‡ உள்ள முள்கலந் தேத்தவல் லார்கலாற்
கள்ள முள்ளவ ழிக்கசி வானலன்
வெள்ள மும்மர வும்விர வுஞ்சடை
வள்ள லாகிய வான்மியூ ரீசனே.
திருவான்மியூர் - திருக்குறுந்தொகை - 4.

பாரானைப் பாரினது பயனா னானைப்
படைப்பாகிப் பல்லுயிர்க்கும் பரிவோன் றன்னை
ஆராத வின்னமுதை யடியார் தங்கள்
அனைத்துலகு மானானை யமரர்கோனைக்
காராருங் கண்டனைக் கைலை வேந்தைக்
கருதுவார் மனத்தானைக் காலற்செற்ற
சீரானைச் செல்வனைத் திருமாற் பேற்றெஞ்
செம்பவளக் குன்றினைச்சென் றடைந்தே னானே.
திருமாற்பேறு - திருத்தாண்டகம் - 1.

சிவத்தியானத்தி லிருப்பவர் காலம், திசை, தேசமென்னும் பேதங்களற்று, பந்தங்களற்று, தன்மை, முன்னிலை படர்க்கை யென்னும் பிரிவுகளற்று அகண்டாகார சொரூபமாய்த் திகழும் பரம சொரூபத்தில் ஆழ்ந்து, ஓரே * ஞானசோதியாய்த் திகழ்வதின் அநுபவம் கீழ்வரும் தாயுமானவர் பாடலால் விளங்கும்:—

தானான தன்மயமே யல்லா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே
போனாலுங் கற்பூர தீபம் போலப்
போயொளிப்ப தல்லாது புலம்வே றின்றாம்
ஞானாகா ரத்தினொடு ஞேய மற்ற
ஞாதுருவும் நழுவாமல் நழுவி நிற்கும்
ஆனாலு மிதன்பெருமை யெவர்க்கார் சொல்வார்
அதுவானால் அதுவாவர் அதுவே செல்லும்.

அது வென்றால், எதுவென்றே யடக்குஞ் சங்கை;
ஆதலினா லதுவென்ப தறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவும் சனக னாதி
மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்
பதியிந்த நிலையெனவும் என்னை யாண்ட
படிக்குநிரு விகற்பத்தாற் பரமா னந்தக்
கதிகண்டு கொள்ளவும்நின் னருள்கூர் இந்தக்
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.
தாயுமானவர் - சிதம்பர ரகசியம் - 22 & 23.

கேவல சகல மின்றிக் கீழொடு மேலாய் எங்கும்
மேவிய வருளின் கண்ணாய் மேவிடமேலா யின்பந்
தாவிட வின்பா தீதத் தனியிடை யிருத்தி வைத்த
தேவெனும் மௌனி செம்பொற் சேவடி சிந்தைசெய்வாம்.
தாயுமானவர் - ஆசையெனும் - 15.

(VI) சமாதி:—பதஞ்சலி முனிவர் எழுதிய சூத்திரத்தில் சமாதியின் பகுதிகளுக்கு வடநூலில் பல பாஷ்யங்கள் செய்துளார். வடநூலில் இருடிகள் வழி வந்த யோகமுறைகளுக்கும், தமிழில் சித்தர் வழிவந்த யோகமுறைகளுக்கும் பல பேதங்களுள. பதஞ்சலி முனிவர் இராஜயோகத்தை, மந்திரயோகம் ஹட யோகங்களினின்றும் பிரித்து விளக்கினர். தமிழ்ச் சித்தர்கள் அவ்வாறு பள்ளிக்கூட பேதங்களை ஏற்படுத்தாமல் மூன்றையுந் தழுவி மந்திரயோகத்தை இயம நியமங்களிற்† சிலபகுதிகளை யடக்கியும், எஞ்சியதைத் தியானத்தில் ஞானாகாரமாய் விளக்கியும் சமாதி இலக்கணத்தைச் செவ்வனே நிறுவினர் இதனை அப்பர் பாசுரங்களில் ஆங்காங்குக் காணலாம்:—

வானைக்கடந் தண்டத் தப்பான் மதிப்பன மந்திரிப்பா
ரூனைக்கழித்துய்யக் கொண்டருள் செய்வனவுத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன நங்கையஞ்ச
வானை யுரித்தன காண்கவை யாற னடித்தலமே.
திருவையாறு - திருவிருத்தம் - 4.

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாந்
தானங் காட்டித்தன் றாளடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல் வன்னி யூரரே.
திருவன்னியூர் - திருக்குறுந்தொகை . 3.

இவ்வாறு ஆங்காங்குச் சுட்டாததுபோல் சமாதியனுபவங்களையும் * சிதாகாசத் தோற்றதையும் † குறிப்பிடும் அப்பர் சொற்றொடர்கள் வடநூல் யோக சாஸ்திர திட்டநுட்பங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்கும். மற்றும் அடியிற்காண்பனபோன்றவை கோயில்களிலிருக்கும் சிவபெருமான் உருவ வர்ணனையா அல்லது யோகசாதனத்தின் தியானமுதிர்ச்சியில் காணப்படும் கடவுளின் திருவுருவத்திற்கும் கபாலத்தினிடை நின்று அமுததாரை யொழுகுவதை உண்டு அவ்வுருவத்தில் பயப்படும் யோகிக்கும் உள்ள தத்துவ வர்ணனையா வென்பது அறிஞர் ஆராய்க:—

நெருப்பி னுற்குவித் தாலொக்கு நீள்சடைப்
பருப்பத மத யானையு ரித்தவன்
திருப்ப ராய்த்துறை யார்திரு மார்பினூல்
பொருப்ப ராவி யிழிபுனல் போன்றதே?
நெருப்ப ராய்நிமிர்ந் தாலொக்கு நீள்சடை
மருப்ப ராவலைந் தாலொக்கு வாண்மதி
திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை யறிவரே.
திருப்பராய்த்துறை - திருக்குறுந்தொகை - 7 & 9.

[இப்பதிகத்தின் 7, 9 பாசுரங்களின் முதலடிகள் ஒன்றாயிருப்பதுபோல் காணப்படினும் கூறியது கூறல் அன்றென்பது திண்ணம். ஆகையால் இவற்றின் பேதம் யாதென்பது ஆராய்க]

சிருஷ்டிவகையிற் காணப்படும் ‡ பஞ்ச பூதங்கள் யோகநெறியை நிலைக்கவொட்டாமல் தடுத்து மன

* சிந்தையுட்சிவ மாய்நின்ற செம்மையோ
டந்தி யாயன லாய்புனல் வானமாய்ப்
புந்தி யாய்ப்புகுந் துள்ளநி றைத்தவெம்
எந்தை யேகம்ப மேத்தித் தொழுவனே.
திருவேகம்பம் - திருகுறுந்தொகை. 5.

† [illegible] வானவர் சித்தல் நியமஞ்சேய்
சோதீ வானவ ருஞ்முண ராததோர்
வேதியா! [illegible] திருவீழிபு
[illegible] யடியேனுத் [illegible],
[illegible] - திருக்குறுந்தொகை - 7.

துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய்
மறவ னாய்ப்பார்த்தன் மேற்கணை தொட்டவன்
குறவ னாருறை யுங்குட மூக்கிலே.
திருக்குடமூக்கு - திருக்குறுந்தொகை - 6.

* ஆனிடை யைந்து மாடுவ ரானிநட்
கானி டைநட மாடுவர் காண்மினோ
தேனி டைமலர் பாயுநெய்த் தானனை
வானி டைத்தொழ வார்வலி வாணரே.
திருநெய்த்தானம் - திருக்குறுந்தொகை - 3.

† ஆதி யாயவ னாருமி லாதவன்
போது சேர்புனை நீண்முடிப் புண்ணியன்
பாதி பெண்ணுரு வாகிப் பரஞ்சுடர்ச்
சோதி யுட்சோதி யாய்நின்ற சோதியே.
சித்தத்தொகை - திருக்குறுந்தொகை - 3.

‡ பொள்ள லாக்கை யகத்திலைம் பூதங்கள்
கள்ள மாக்கிக் கலக்கிய காரிருள்
விள்ள லாக்கி விசயமங் கைப்பிரான்
உள்ள நோக்கிநின் றுள்ளுறு கின்றதே.
திருவிசயமங்கைத் - திருக்குறுந்தொகை . 5.

தைப் பலவகையில் கலேத்து இழுப்பதால் இதற்குச் சூக்கும பஞ்சாட்சரத்தியானம் சமாதி நிலேக்கு வழி காட்டித் துன்பம் ஒழிப்பதை அப்பர் விளக்குவது காண்க:—

அல்ல லாகவைம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு "சிவாய நம" வென்று
நல்ல மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினேப்பகை வீடுமே.

திருநல்லம் - திருக்குறுந்தொகை - 6.

எல்லா அறிவுக்கும் மேலான அறிவு சமாதிநிலேயில் பரமனேக் கண்டறியுமறிவே யென்பதை அப்பர் வெளியிடும் நயத்தைக் காண்க:—

சந்தி யானேச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானேப் புத்தேளிர் தொழப்படும்
அந்தி யானே யாமாத்து ரழகனேச்
சந்தி யாதவர் தீவினே யாளரே.

திருஆமாத்தூர் - திருக்குறுந்தொகை - 2.

[குறிப்பு:—"விள்ளல்" என்பது உலகவழக்கில் "வெள்ளல்" என்று வழங்கும் பதம். ஒருவனே யொருவன் வையும்போது "தெரியும் உன்வெள்ளல்" என்னும் சொற்றொடரை நோக்குக].

திருஆமாத்தூர் திருப்பதிகத்தில் அப்பர் செய்த தியானமுறையும் சமாதி யிலக்கணமும் அவர் கூறுமலே வெளியாக்குமவர் சொற்றொடர்களே கவனிக்க:

பஞ்ச பூத வலேயிற் படுவதற்
கஞ்சி நானுமா மாத்தூ ரடிகனே
நெஞ்சி னுள்நினேந் தேன்நினே வெய்தலும்
வஞ்ச ஆறுகள் வற்றின காண்மினே!
பித்த னேப்பெருந் தேவர் தொழப்படும்
அத்த னேயணி யாமாத்தூர் மேவிய
முத்தி னேயடி யேனுண் முயறலும்
பத்தி வெள்ளம் பரந்தது காண்மினே!
பண்ணிற் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்
கண்ணித் தாகு மழுதினே யாமாத்தூர்
சண்ணிப் பானேத் தமர்க்கணித் தாயதோர்
கண்ணிற் பாவைபன் னுனவன் காண்மினே.

—திருஆமாத்தூர் - திருக்குறுந்தொகை. 4,6,8.

சமாதிநிலேயானது மனத்திற்கும் வாக்குக்கும் அதீதமானதால் அதை உருவகத்தாலேயே வெளிப்படுத்த வேண்டுமென்று அப்பர் ஞானத்தளேயாய்ப் பரமனேக் கூட்டும் நிலேயென்பர்:—

முன்னே ஞான முதற்றனி வித்தினேப்
பின்னே ஞானப் பிறங்கு சடையனே
யென்னே ஞானத் திருளறுத் தாண்டவன்
றன்னே ஞானத் தளேயிட்டு வைப்பனே.

—தனித் திருக்குறுந்தொகை 3,

தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோ
ருள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ லேக்கடல்
வெள்ளத் தேனுக்கெவ் வாறு விளேந்ததே.

ஷை 9-10.

அத்தகைய ஞானத்தலேயிலிருந்து தியானத்தின் முடிவில் சமாதி பொருந்துங்காலே அநுபவிக்கும் பேரின்பம், அச்சச்சிதானந்த சொரூபானுபவத்தால் வெளிவிடும் அப்பர் சொற்றொடர்களே அடியில் வரும் பாக்களிற் காண்க :—

புந்திக் குவிளக் காயபு ராணனேச்
சந்திக் கண்ணட மாடுஞ் சதுரனே
யந்தி வண்ணனே யாரழன் மூர்த்தியை
வந்தே னுள்ளங் கொண்டானே மறப்பனே ?
தேனேப் பாலினேத் திங்களே நாயிற்றை
வான வெண்மதி சூடிய மைந்தனே
வேனி லானே மெலிவுசெய் தீயழல்
ஞான மூர்த்தியை நான்மறக் கிற்பனே ?
கன்ன லேக்கரும் பூறிய தேறலே
மின்ன னேமின் னனேய வுருவனேப்
பொன்ன னேமணிக் குன்று பிறங்கிய
வென்ன னேயினி யான்மறக் கிற்பனே?
கரும்பினேக் கட்டி யைக்கந்த மாமலர்ச்
சுரும்பினேச் சுடர் சோதியுட் சோதியை
யரும்பி னிற்பெரும் போதுகொண் டாய்மலர்
விரும்பு மீசனே நான்மறக் கிற்பனே?

மறக்கிற்பனே யென்னுந் திருக்குறுந்தொகை 2,5,6,7

மற்றும்

துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சு ணின்று நினேப்பிக்கு நீதியை
நஞ்சு கண்டத்த டக்கிய நம்பனே
வஞ்ச னேனினி நான்மறக் கிற்பனே.

ஷை 8.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலே,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனே மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்களுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய் கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

மதுரை காஞ்சீபுரம்.

யாப்பிலக்கணம்

தொடை—மோனே

[332-வது பக்கத்தொடர்ச்சி]

ஓசைஇன்பத்தை உயர்த்துகின்றதாதலின் மோனே நயம் செய்யுளடிகளில் பெரும்பாலும் விரும்பப்படுகின்றது. எனினும், அகநானூறு புறநானூறு பத்துப்பாட்டு நற்றிணே குறுந்தொகை அனேய சங்கச் செய்யுள்களில் மோனே என்பது செய்யுள்களுக்கோர் இன்றியமையாத உறுப்பாய்க் கொள்ளப்பெற்றதாகத் தெரியவில்லே.

நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கு மருவிப்
பீடுகெழு மலேயற் பாடி யோரே.

[மலேயமான் திருமுடிக்காரி என்னும் வள்ளலேப்புகழ்ந்து கபிலர் பாடிய புறநானூற்றுச் செய்யுள் இது. இதன் பொருள்:—நல்லது அல்லாத நாளில் புறப்பட்டாலும், பறவை முதலிய சகுனங்கள் கெட்டவைகளாயிருந்து இடையே தடுத்தாலும், அவனேக் காணச் சென்ற சமயம் நேரானதாக இல்லாமற் போனாலும், அவன்முன் திறனற்ற புன்மொழிகளேப் பேசிவிட்டாலும், வரிசையாக ஓசை நிறைந்து ஒலிக்கும் அருவியையுடைய பெருமை பொருந்திய மலேயையுடைய திருமுடிக்காரியைப் பாடியவர்கள் ஒருபோதும் ஒன்றும் பெறுமல் வறியர்களாய்த் திரும்பமாட்டார்—நாள் சகுனம் சமயம் சொற்சோர்வு யாவும் பொய்க்கும்படி அளிக்கும்வள்ளல் காரி என்பது இப்புகழ்ச்சியின் கருத்து]

இந்தப் புறநானூற்றுச் செய்யுளின் ஓரடியிலேனும் மோனே அமையாமை காண்க.

தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானேக் கோட்டிடை யொழிந்த
சிறுவீ முல்லே கொம்பிற் றூஅய்
இதழழிந் தூறுங் கண்பனி மதரெழிற்
பூணக வன்முலே நனேத்தலுங்
காணுர் கொல்லோ மாணிழை நமரே.

[மாவளத்தார் பாடியகுறுந்தொகைப் பாட்டு இது. நாயகன் தன்னே விட்டுப் பிரிந்தனன் என்னக்கலங்குந் தலேவியை நோக்கி, அவள்தோழி, "அவர் உன்னேப்பிரிந்து செல்லார். அப்படிச் சென்றாலும் இடையில் உன்னினேவு வந்துறுத்த மீள்வார்" என்று தேற்றியது. இதன் பொருள்:—பெருமையுடைய ஆபரணங்களே அணிந்தவளே, நம் தலேவர் உன்னே விட்டுத் தனியாய்ச் செல்வாராயின், அவர் வழியிலுள்ள காட்டின்கண் கிளேகளின் மீது படர்ந்த முல்லேக் கொடியின் சிறுமலர்கள் இதழ் நெகிழ்ந்து ஒழுக்கிய தேனுனது, உணவுதேடி அங்குக் கீழே வந்த யானேயின் தந்தத்தின்மீது விழுவதைக் கண்டதும், தன்னேப்பிரிந்து வருந்தும் உனது கண்ணீர், செறித்த அழகினேயுடையதாய் நகைகளே யணிந்து சூதாடு கருவிபோன்ற உன் முலேகளே நனேக்கும் நிலேயை நினேவுபடுத்திக் கொள்ளாமல் இருப்பாரோ, —இதனே நினேந்ததும் உடனே மீள்வர் என்பது நிச்சயம்]

இந்தக் குறுந்தொகைச் செய்யுளிலும் ஓரடியிலேனும் மோனே அமைந்திலது. எனினும் சங்கப்பாட்டுகள் அனேத்தும் மோனேயே யின்றிப் பாடப்பெற்றன வென்று எண்ணற்க. நாம் முன் குறித்தநூல்களே எடுத்துப் பார்ப்பீராயின் பாட்டுகளின் சில அடிகள் மோனே பெற்றும் சில அடிகள் மோனே பெறுமலும் நடக்கக் காணலாம்.

கடவுட் கற்சுனே யடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளே மலரொடு காந்தட்
குருதி யொண்பூ வுருகெழக் கட்டிப்
பெருவரை யடுக்கம் பொற்பச் சூர்மக
ளருவி யின்னியத் தாடு நாடன்
மார்புதர வந்த படர்மலி யருநோய்
நின்னணங் கன்மை யறிந்து மண்ணூந்து
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனே வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே

[காதலனேக் களவிற் கூடிப் பிரிந்தபோது உடல்மெலிவடைந்த தன் மகளே நோக்கிய அன்னே உண்மையுணராமல், முருகக்கடவுள் அவளேத் தாக்கியிருத்தல் வேண்டும் என நினேத்து வேலனேக் கொண்டு வெறியாட்டுவிக்கக் கருதவும், அம்மகளின் நிலேக்கு உண்மைக்காரண மறியும் தோழி மெய்யைச் சொல்லி அவ்வெறியாடலே விலக்கும் எண்ணத்தளாகி, முருகனே நோக்கி உரைப்பாள்போல் உண்மையை வெளியாக்கிய சூழ்ச்சியை உட்கொண்டது இந்நற்றிணேப் பாட்டு. இதன்பொருள்:—கடவுள்தன்மை பொருந்திய மலேயின்கண் உள்ள சுனேயில், இலேகளேக் கடந்து மேலெழுந்து மலர்ந்ததும் பறிக்காமல் விட்டிருந்ததும் ஆகிய குவளேமலரோடு இரத்தம்போன்ற பிரகாசம் பொருந்திய காந்தள்மலர்களே வடிவமையச் சூடி, பெரியமலேப்பக்கங்கள் அழகடையும்படி வனதேவதைகள், அருவியாயும் ஒலியேவாத்தியங்களாக நடனமாடும் நாட்டிற்குரியவனுன நம் தலேமகனது மார்பொடு சேர்ந்ததால் வந்ததும், நினேப்பினுல் மிகுவதும், தீர்வதற்கரியதும் ஆகி (எம் தலேமகளேப்பற்றிய) காமநோய் நின்னுல் தாக்கப்பட்டு ஏய்ந்தது அன்றென்பது அறிந்திருந்தும், ஓ முருகனே, நீ, தலேநிமிர்ந்து, கார்காலத்தில் மலரும் கடம்பமாலேயைச் சூடி, பூசாரி யழைக்கும்போது வெறியாடு மிடத்திற்குப் பலியேற்க வருவாயாயின், நீ கடவுளாயிருந்தாலும், அறியாமை மிகவும் உடையவனே; அம்மடமையோடு நெடுங்காலம் நீ வாழ்க.]

பதினேரு அடிகளுடைய இந்நற்றிணேப்பாட்டில், ஆறு அடிகள் மோனே பெற்றும், ஐந்து அடிகள் மோனே பெறுமலும் இருக்கின்றன. இவைகளெல்லாம் ஆசிரியப்பாக்கள். இவைகளுக்குப் பிற்காலத்தனவாய மணிமேகலே சிலப்பதிகாரம் அனேய நூல்களின் பெரும்பகுதி மோனேயுடைய அடிகளால் அமைந்திருக்கும். உதாரணமாக,

ஒருதனி நின்று யுன்றிற மறிந்தேன்
வளரிள வனமுலே மடந்தை மெல்லியல்
தளரிடை யறியுந் தன்மையள் கொல்லோ
விளேயா மழலே விளைந்து மெல்லியல்
முளேயெயி றரும்பி முத்துநிரைத் தனகொல்
செங்கய னெடுங்கண் செவிமருங் கோடி
வெங்கணே நெடுவேள் வியப்புரைக் குங்கொல்

[உவவனத்தில் மணிமேகலை தானும் தன்தோழியும் தனியிருந்தபோது, அவள்மீது காதல் கொண்டிருந்த அரசிளங் குமரன் உதயகுமரன் என்பவன் அங்கு எய்தவும் மணிமேகலை அஞ்சிப் போய்ப் பளிக்கறையுள் ஒளிந்து கொள்ள, உதயகுமரன் அத்தோழி சுதமதியை நோக்கி, மணிமேகலை காமத்திற்கு வயப்படும் பருவமடைந்தவளோ வென வினவும் குறிப்பின இவ்வடிகள். இதன்பொருள்:-'தனியே நிற்கும் சுதமதியே, மணிமேகலையை நீ அப்புறப்படுத்தி ஒளித்து வைத்திருப்பதை யான் அறிவேன். வளர்கின்ற இளமையும் அழகும் வாய்ந்த முலைகளையுடைய அவள் ஆடவர் காமத்தால் தளர்கின்ற சமயத்தை அறியத்தக்கவளோ? முற்றாத அவள் மொழிகள் முதிர்ந்தனவோ? அவளது முளைபோன்ற பற்கள் முத்துவரிசைபோல் குறைநிறைந்துவிட்டனவோ? காதலன்பால் கடைக்கண் ஒட்டு மாற்றால், செவந்த கயல்மீன்கள் போன்ற அவளது பெரிய கண்கள் காதினிடம் சென்று, விரும்பத் தகுந்த கணைகளையுடைய மன்மதன் புரியும் வியப்பை உரைக்குமோ? —என வினவினன்]

இவை மணிமேகலை என்னும் நூலினின்று பெயர்த்தெழுதிய சில அடிகள். அழகியனவாயமைந்த அடிகளனைத்தும் இவ்வண்ணம் மோனைத்தொடை வாய்ந்திருக்கக் காண்போம்.

மிகப்பழைய காலத்தில் பெரும்பாலும் தமிழ் நூல்கள் அகவற்பா என்னும் ஆசிரியப்பாவில் பாடப் பெற்றன. அவைகள் முதல் மோனையைக் கருதாமற் பாடிய தன்மையும் பிறகு பெரும்பாலும் மோனையமைத்தே பாடும் வழக்கம் தோன்றியதுங் கண்டோம். இவ்வாசிரியப்பாவிற்குப் பின் பயிலலாய வெண்பாக்களிலும் கட்டளைக்கலித்துறைகளிலும் விருத்தங்களிலும் அடிதோறும் மோனை அமையவேண்டுமென்பதே முறைமையாயிற்று என்னலாம்.

ஒள்வாண் மறவ ருருத்தெழுந் தும்பர்நாட்
கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
கருங்கண்ணி வெண்கட்டிற் கால்.

[ஒரு வீரன் வந்து தன் படையால் ஒரு ஊரைச்சூழ்ந்து கொண்டு, அவ்வூர்த் தலைவனது மகளைத் தனக்கு மணஞ் செய்து தரும்படி, வற்புறுத்த, படைக்கஞ்சா அவ்வூரார், மறுத்துச்சொல்லியது. இப்பாட்டின்பொருள்—இதன்முன், தேன் ஒழுகும் நறியமாலையை அணிந்த இவள் காரணமாக இவளைக் கொள்ளவேண்டி இவள் இடையின் அழகை நினைத்து, ஒள்ளியவாளையுடைய வீரர் பலர் ஏறி வந்த இளைய யானையின் கொம்புகளே, இந்தக் கறுத்த கண்களையுடையவளது வெண்மையான கட்டிலுக்குக்கால்கள் ஆயின- அவ்வீரர்களை வென்று அவர் வந்த யானையின் கொம்புகளை முறித்து விட்டோம்; அக்கதிதான் உனக்கும் கிடைக்கும்]

புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுள் இதன் ஒவ்வொரு அடியிலும் மோனையிருப்பது காண்க. இப்படியே, பெருந்தேவனார் பாரதம், நளவெண்பா, திருவேங்கடமாலை அனைய வெண்பா நூல்களில் செய்யுள்களெல்லாம் மோனையுடன் கூடிய அடிகளாலேயே அமைந்திருக்கும். எனினும் திருக்குறள் நூலும் வெண்பாவிற் பாடப் பெற்றிருந்த போதிலும் அந்நூலினுள் மோனை பெற்றும் பெறாமலும் செய்யுள்களும் செய்யுள் அடிகளும் விரவி வந்திருக்கின்றன. நாலடியார்ச் செய்யுள்களும் வெண்பாக்களே. ஓரோவழி மோனையில்லாத அடிகளை இப்பாசுரங்களுள்ளுங் காணலாம்.

வெண்டளை வாய்ந்து ஐந்து சீர் உடைய அடிகள் நான்கு கொண்ட பாசுரம் கட்டளைக்கலித்துறை எனப்படும். முன் இவ்விதழ்களில் பாடமாகக் கற்ற திருவரங்கத்தந்தாதி என்னும் நூல் கட்டளைக் கலித்துறையால் ஆபது. திருக்கோவை, தஞ்சை வாணனர் கோவை முதலிய கோவை நூற்களின் செய்யுள்களுங் கட்டளைக் கலித்துறைகளே. கட்டளைக் கலித்துறை அடிகளெல்லாம் மோனையுடன் கூடினவைகளாகவே இருக்கும்.

ஆரணங் காணென்ப
ரந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங் காணென்பர்
காமுகர் காமநன் னூலதென்பர்
ஏரணங் காணென்ப ரெண்ண
ரெழுத்தென்ப ரின்புலவோர்
சீரணங் காயசிற் றம்பலக்
கோவையைச் செப்பிடினே.

என்னும் கட்டளைக் கலித்துறைச் செய்யுளில் (இது மாணிக்கவாசகர் பாடியதன்று) எல்லா அடிகளிலும் மோனை இருப்பதைக் காண்க.

விருத்தங்களில் மோனை இல்லையாயின் அது ஒரு குற்றமாகவே கருதப்படுகின்றது. சிந்தாமணி, சூளாமணி, பெரியபுராணம், கந்தபுராணம், கம்பராமாயணம், வில்லிபாரதம், திருவிளையாடற்புராணம், தணிகைப்புராணம், அனைய பெருங்காவியங்கள் விருத்தங்களும், விருத்தக்கலித்துறைகளும் ஆகிய செய்யுள்கள் கலந்து ஆக்கப்பெற்றவை.

சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகண் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்புநடை கற்பதென வந்தாள்.

இது, சிந்தாமணியிலுள்ள ஓர் கலி விருத்தம். இரண்டாமடியில் எல்லாச்சீர்களும் மோனை பெற்றிருப்பதால் முற்று மோனை. மூன்றும் நான்காம் அடிகளில், சீர் முதலில் அல்லவாயினும் சீர்களின் இடையிலேனும் மோனை எழுத்துக்கள் ஓசைநயம் விளைவித்து நிற்கின்றன. அவ்வாறு சீரின் நடுவில் மோனையாக உதவி நிற்கும் எழுத்துக்கள் பெரும் பாலும் ஒரு மொழியின் முதலெழுத்தாக இருக்கும்.

தாதையைக் கொன்றான் பின்னே
தலைசுமந் திருகை நாற்றிப்
பேதைய னென்ன வாழ்ந்தாய்
என்பதோர் பிழையுந் தீர்ப்பாய்
சீதையைப் பெற்றே னுன்னைச்
சிறுவனு மாகப் பெற்றேன்
ஏதெனக் கரிய தென்றான்
இறுதிநாற் கேல்லை கண்டான்.

தூதுவந்த அங்கதனைத் தன்வயப்படுத்திக் கொள்ளுமாறு இராவணன் உரைத்த கம்பராமாயணச் செய்யுள் இது. இதனில் முக்கியமான சொற்களிலேயே மோனை எழுத்துக்கள் அமைந்திருக்கின்ற சிறப்புக் கருதத்தக்கது.

தாரார் வாகை சூடிய வேலான் தன்கையில்
கூரார் வாளாற் புள்ளுரு வத்தைக் குறைவிக்கச்
சூராம் வெய்யோ னண்ட முகட்டைத் தோடவோங்கிப்
பாராய் நின்றான் விண்ணவர் யாரும் பரிவெய்த

இது கந்தபுராணத்திலுள்ள ஓர் கலித்துறை. அடிக்கொரு மோனையேனும் அமைந்திருப்பது காண்க.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.
எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுத்தமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ
மாத்திரைகள்

உபயோகிங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்தரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!
போஜன விதி
உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
மதராஸ்.

Estd. NATIONAL 1906
INSURANCE COMPANY LIMITED.
Head Office:- NATIONAL INSURANCE BUILDINGS
7, Council House St, Calcutta.

PHENOMENAL
PROGRESS
Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering
This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—
113, Armenian St, Madras. } T.ANANTACHARI, B.A., Branch Secretary.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.
ஓர் தேசிய மாதப் பத்திரிகை.
மூன்றாவது ஆண்டு
நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ,, ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.
விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், மூடனுக்கு மூடனவேண்டா, நல்லோர்சடன், எத்தைக்கண்டு இச்சைகொண்டோம், அலையடங்கக் காக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4. வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாரானார், நாணத்தால் ஙைணர்திறம், மால்வாலியோவின்மரபு மாய்ந்ததில்லையோ, மானமழிந்தபின், மண்காற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைமேல்கனைக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கல்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்காற்றல், சண்டேலி ஆற்றல், வாலின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், மானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்) மொழிபெயர்ப்புக்கட்டுரைகள், மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட
தோல்பயிண்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.
கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"

VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

நோயற்ற :: வாழ்வே

ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்

குறைவற்ற :: செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளைநீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.,B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனா பஜார், மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

நேபாளத்திற்கு அருகாமையிலுள்ள பூட்டான் அரசரின் சகோதரர் சென்றவாரம் போர்ஸாத்தில் காந்தி அடிகளைக் கண்டு பேசிக்கொண்டிருந்தனராம். அவர் பொன்னாலும் வெள்ளியாலும் செய்த இரண்டு பெட்டிகளில், ராட்டினத்தில் நூற்ற நூலால் கைத்தறியில் நெய்த துணிகளால் தைத்த உடைகள் சில வைத்துக் காந்தியடிகளுக்கு அரசாங்க வெகுமதியாக அளித்தனராம். காந்தியடிகள் அவைகளைச் சந்தோஷத்துடன் ஏற்றுப் பூட்டான்வாசிகளுக்கு, அஹிம்சை கதர் இவற்றை வளர்க்குமாறு ஒருசெய்தி அனுப்பினராம்.

***

தான் கதரினிடம் கொண்டுள பற்றைக்கண்டு பித்தன் எனத் தன்னைக் கூறுகின்றனர் என்றும், இப் பித்துத் தன்னைப்பற்றியதற்குக் காரணம் எதுவென்றும் காந்தியடிகள் யங்இந்தியாப் பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகின்றார்:—

இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. இந்த ஏழு லட்சம் கிராமங்களிலும் வசிக்கும் ஜனங்கள் அரைவயிறு சோறும் இல்லாது வாடுகின்றனர். எனவே அறுவடை மாசூல் காலம்போக மிகுதியான 6 மாதம் அவர்களுக்கு வேலையில்லை. இந்த ஓய்வு காலங்களில் ஒரு துணைத்தொழிலை அவர்கள் மேற்கொண்டால் பசியின் கொடுமையைச் சிறிது அகற்றிவிடலாமன்றோ. இக்காலங்களுக்குத் தக்கது நூல் நூற்பதுதான். ஏழை யிவர்கள் இதைக் கைப் பற்றும்படி செய்தால், அவர்கள் வறுமை நீங்குவதுமன்றி நாட்டின் பொருளாதார நிலையும் வளர்ச்சியடையும். எனவே நாம் அனைவரும் கதர் கட்டுவது அவசியம். இது ஒவ்வொருடைய கடமையும் ஆகும்.

***

பம்பாயில் ராமா காமத் என்பவர் கடந்த ஞாயிறன்று 14 வயது உடைய தாராபாய் என்னும் தமது மகளையும், 8 வயதுள்ள சுபத்ராதேவி என்னும் தமது மகளையும் அபினைக்கொடுத்துக் கொன்றுவிட்டுப் பின் தாமும் தற்கொலை செய்துகொண்டனராம். போலீசார் சவத்தைப் பரிட்சை செய்து பார்க்கையில் அவர் சட்டைப் பையில் ஒருகடிதம் அகப்பட்டதாம். அக்கடிதச் சுருக்கம் வருமாறு:—

"நான் நற்குலத்தில் பிறந்தவன். 1920-வது ஆண்டு முதல் எனக்கு இன்றுவரை வேலையொன்றும் கிடைக்கவில்லை. கடவுளிடம் நம்பிக்கையில்லாது மனிதர்கள் தங்கள் சாமர்த்தியத்தில் பிடிப்புவைத்துத் தமக்கும் சமூகத்திற்கும் தாம் செய்துவைக்க முயலும் முயற்சியெலாம், அவலமேயாகின்றதைத் தேர்ந்துகொண்டேன். நான் வேலைக்கென முயன்றதெல்லாம் வீண். பிறரிடமிருந்து எவ்வளவு காலம் யாசித்து வயிறு வளர்ப்பது? இந்தப் பத்துவருடமாய் நான் பட்டதெல்லாம்போதும். இரக்கவிரும்பவில்லை. இரப்பதினும் இறப்பதேமேல் என்ற முடிவு செய்தேன். நான் சாக வருந்தவில்லை எனினும் எனது உயிரனைய இருகுழந்தைகளின் நிலையே என்னைக் கலக்கியது. எனக்குப் பின் அவர் இருந்து கஷ்டப்படலாகுமே என்று அவர்களையும் கொன்று நானும் தற்கொலை செய்துகொண்டேன். இக்கொலைக்குத் தூண்டியகருத்தை அறியவல்ல கடவுளும்இப்பெண்கொலை பாபத்தினின்று என்னைக் காத்தருள்வார்"

***

சென்னைச் சுதேசியப் பிரசாரக் கமிட்டியார் விடுத்துள அறிக்கை:—

அன்னிய நாடுகளிலிருந்து நம் தேசத்தில் ஒரு வருடத்தில் இறக்குமதியாகும் சாமான்களின்விவரம்.

	ரூ—கோடி	லட்சம்
பஞ்சு, நூல், துணி	63,	00
சர்க்கரை	16,	20
கம்பளித்துணி	4,	50
காகிதம்	4,	30
பட்டுத்துணி	3,	70
கண்ணாடிச்சாமான்கள்	3,	10
ரப்பர் சாமான்கள்	2,	80
சிகரெட்	2,	70
சோப்	1,	60
உப்பு	1,	50
சிமிட்டி	0,	70
தோல் சாமான்கள்	0,	70
தீக்குச்சி	0,	20

அன்னிய நாடுகளுக்கு நாம் ஒரு வருடத்தில்ஏற்றுமதி செய்யும் பொருள்களின் விவரம்:—

	ரூ—கோடி	லட்சம்
பஞ்சு	66,	00
எண்ணெய் வித்துக்கள்	33,	00
தோல்	12,	00
கம்பளி (ஆட்டு ரோமம்)	5,	00
மோட்டார் ரப்பர்	2,	00
புகையிலை	1,	30

இக்கணக்கினைக் கண்டபிறகாவது இந்தியர்கள் அன்னியச்சரக்கு பகிஷ்காரம் செய்யவேண்டுமென்று காந்தியடிகள் கேட்கின்றார்.

***

சென்னையில் மறியல் இயக்கத்தை ஸாத்வீக முறையில் நடத்தவும் கதர் ஜனங்களினிடை அதிகம் பரவுமாறு செய்யவும், 2000 பேருக்குக் குறைவிலாத ஒரு தொண்டர்படை திரட்டவும் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒருகூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் ஸ்ரீ மான் S. சத்திய மூர்த்தி ஐயர் பேசியதாவது:—

இப்பொழுது காந்தியடிகளின் முயற்சியாலும், தொண்டர்களின் போற்றுதற்குரிய தியாகத்தாலும் நாம் வெற்றி பெற்றுளோம். மிருகபலத்தின் துணையுடைய அரசாங்கம் நம்முடன் ராஜி செய்துகொண்டுளது. சத்தியம் நமக்குத் துணைசெய்துள ராஜிக்கு விரோதமாய் நாம் காரியங்களை நிகழ்த்துதல் சத்தியத்திற்கு விரோதமாகும். இதனால் சும்மாவிருக்குமாறு நான் சொல்வதாகக் கொள்ளவேண்டா. ராஜி நிபந்தனை கடவாதபடி சாத்விக முறையில் கதர்வளர்ச்சிக்கானபடி முயலவேண்டும். பொதுவாய் நம் நாட்டில்அகப்படாதசாமான்களை அயல்நாடுகளிடமிருந்தே வாங்கவேண்டும். அத்தகைய சாமான்கள் வாங்குவதில் பிரிட்டனுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

நாம் இப்பொழுது பிரசார வேலைக்கென்று தொண்டர்படை திரட்டவேண்டும். சென்னையில் மாத்திரம் 2000 பேரைக்கொண்ட தொண்டர்படை அவசியம். எனவே நாம் இவ்வேலையில் முதன் முதலாக ஈடுபடவேண்டும். நாம் இவ்வண்ணம் முயற்சியுடன் இருந்து நமது பிரதிநிதியாக இங்கிலாந்து செல்லும் காந்தியடிகளுக்கு உதவி செய்வோமேல் நமது முயற்சியின் பயனான சுயராஜ்யம் சீக்கிரத்தில் கிடைக்கப்பெறுவோம்."

18896

KALANILAYAM.
REG. No. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

கலா நிலய முன்னைய இதழ்கள்.

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனார் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பால காண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0**, வெளிநாடு ரூ. **11—8—0**.

(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 புக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

காலஞ்சென்ற எம். ஸி. நஞ்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்

பண்டாரம்ஸ் மூலிகை மாந்த எண்ணெய்.

தாய்மார்களிடம் இம்மருந்து அவசியம் இருக்க வேண்டும். குழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்களுக்கு யாதொரு பயமுமின்றிக் கொடுக்கக்கூடிய பேதிஎண்ணெய் இதுவே. வயிற்று ஜீரணகாரிகளில் ஏற்படும் கோளாறுகளே குழந்தைகளுக்கு ஏற்படும் வியாதிகள் பலவற்றிற்கு முக்கிய காரணம். இவ்வியாதிகளை நீக்குவதில் இம் மாந்த எண்ணெய் இணையற்றது. இந்த எண்ணெயை உபயோகித்தவரக் குழந்தைகளுக்கு யாதொரு வியாதியும் அணுகா. ஒரு அவுன்ஸ் புட்டி அணா 12.

விபர கார்ட்லாக் இனும்.

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49. சிங்காச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம் [illegible]காண்டம்:—T. N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்களைக் கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)